உ
சிவமயம்

# பரராசசேகரம்

## பித்தரோக நிதானமும் சிகிச்சையும்

மூலம்

ஏழாலை
சுதேச வைத்தியர்
**ஐ. பொன்னையாபிள்ளை**

மீள்பார்வை
வைத்திய கலாநிதி
சு. நவரத்தினம்
க. வே. துரைராசா.

611
பொன்
SL-IPR

ஆயுர்வேத வைத்திய நூல்கள் மீள்பதிப்புக் குழு
1999

ம்தியர் வைத்தியசாலை & மருந்தகம்
முத்தவினாயகர் வீதி நல்லூர், யாழ்ப்பாணம்.

# பரராசசேகரம்
## பித்தரோக நிதானமும் சிகிச்சையும்

மூலநூற் பதிப்பாசிரியர்
ஏழாலை
சுதேச வைத்தியர்
ஐ. பொன்னையாபிள்ளை

குறிப்புரை
வைத்திய கலாநிதி
சு. நவரத்தினம்
க. வே. துரைராசா.

**மீள்பதிப்புக் குழு**
**அகஸ்தியர் வைத்தியசாலை & மருந்தகம்**
29, மூத்தவினாயகர் வீதி நல்லூர்,
யாழ்ப்பாணம்.

உரிமம் பதிவு
1999

First Published – 1934
Revised Editing – 1999

By the Committee for the Publication of
Siddha Ayurvedic Medical Texts Jaffna, Sri Lanka

**I. S. B. N:-**

***Published by:***

K. V. Thurairajah
Secretary, Committee for the Publication of
Siddha Ayurvedic Medical Texts
Agasthiyar Dispensary & Pharmacy

29, Moorthavinayagar Veethy,
Nallur Jaffna, Sri Lanka.

**Nov – 1999**

**Page :-** ix + 44

And Printed in Sri Lanka
By Thaya Print
**138, Navalar Road, Ja.**



# பதிப்புரை

ஈழத்து தமிழ் பாரம்பரியத்தின் ஒரு காலகட்டச் சிந்தனையோட்டத்தின் ஒரு பகுதி வெளிப்பாடாக வைத்தியம் சோதிடம் குறித்த சிந்தனைகள் அமைகின்றன. ஈழத்து தமிழ்மக்கள் பண்டைக் காலம் முதல் சுதேச வைத்தியத் துறையில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தனர். என்பதற்கு யாழ்ப்பாண மன்னர் காலத்தில் தோன்றிய பரராசசேகரம் முதலான வைத்திய நூல்கள் சான்றாக அமைகின்றன யாழ்ப்பாண மன்னர்கள் வைத்தியத்துறையில் கொண்டிருந்த அலாதியான பிரியத்தை எடுத்துக் காட்டுவதாக பரராசசேகரம் செகராரசேகரம் விளங்குகின்றது.

இன்று மேற்கத்தேய வைத்திய முறையின் மீதான கவர்ச்சி அதிகரித்து வருகின்ற போதும் தமிழ் மக்களின் பாரம் பரிய வைத்திய முறையான சித்த, ஆயுர்வேத வைத்தியத்தின் செல்வாக்கும் எந்த வகையிலும் பாதிப்படைந்து விடவில்லை. யாழ்ப்பாணத்து, லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி இப்பாரம்பரிய சித்த ஆயுர்தேவ வைத்திய முறையை 1925ம் ஆண்டில் இருந்து இன்று வரை புகட்டி வருகின்றது குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புலமை சார் துறைகளுள் சித்த மருத்துவத்துறையும் இருந்து வருகிறது. பாரம்பரிய மருத்துவம் மேலைநாட்டு மருத்துவ முறைகளோடு ஒப்பிட்டு மாணவர்களுக்கு கற்பிக்கப்பட்டு வருகிறது. இத்தகைய சூழலில் பாரம்பரிய மருத்துவம் பற்றிக் கூறும் நூல்களின் தேவையும் பயன்பாடும் பலராலும் உணரப்பட்டுள்ளது.

இதனால் பிரதிகள் தீர்ந்தும், இருப்பவை சிதைந்தும் உருக்குலைந்தும் போயுள்ள பரராசசேகரத்தினை, மீள் பதிப்புச் செய்து பயன்பாட்டுக்குச் செறிவாக்குவதே இப்பதிப்பின் தலையாய நோக்கமாகும். இம்முயற்சிக்கு உங்களிடமிருந்து கிடைக்கும் ஆதரவு இப்பணியில் எம்மை மேலும் காரிய வேகத்துடன் ஈடுபடுத்துமென நம்புகிறோம்.

பதிப்பாசிரியர்
க. வே. துரைராசா
செயலர்

# அணிந்துரை

ஆரியச் சக்கரவர்த்திகள் என அழைக்கப்பட்ட யாழ்ப்பாணத் தமிழ் வேந்தர்கள் (1216 - 1621) தமிழ்மொழி இலக்கிய வளர்ச்சியில் ஆர்வம் காட்டியது போலவே, வைத்திய சோதிட நூல்களை ஆக்குவதிலும் பேணுவதிலும் அதிக ஆர்வம் காட்டினர். இம் மன்னர்கள் காலத்தெழுந்த இலக்கியங்களிற் பெரும்பாலான இன்று கிடைக்கு மாறில்லை எனினும் இவர்கள் காலத்தெழுந்த வைத்திய சோதிட நூல்கள் ஓரளவுக்குக் கிடைத்துள்ளன. இன்று நமக்குக் கிடைக்கும் வைத்திய நூல்களுட் பரராசசேகரந்திக்குத் தனித்துவமானதோர் முக்கியத் துவம் உண்டு.

பத்தாயிரத்திற்கு மேற்பட்ட செய்யுள்களைக் கொண்ட பரராசசேகரத்தை முதன் முதலில் பதிப்பித்து வெளியிட்ட பெருமை ஏழாலையைச் சேர்ந்த ஐ. பொன்னையாவைச் சாரும். ஈழத்துத்தமிழ் இலக்கிய வரலாற்றில் அழியாத ஓர் இடத்தை இந் நூற்பதிப்பு மூலம் இவர் பெற்றுள்ளார்.

பரராசசேகரன் எனச் சிம்மாசனப் பெயர் கொண்டு விளங்கிய இம் மன்னனின் பெயரை இன்றும் எமக்கு நினைவூட்டுவன பரராசசேகரம் எனும் வைத்திய நூலும், பரராச சேகரப்பிள்ளையார் (இணுவில்) கோயிலுமேயெனலாம்.

ஈழநாட்டில் சிறப்பாக யாழ்ப்பாணப் பிரதேசத்தில் வழங்கி வந்த ஆயுள்வேத வைத்திய முறைமையை அறிய இந்நூல் பெரிதும் உதவுகின்றது.

பல்வேறு விதமான நோய்களுக்கு மருந்துவம் கூறும் இந்நூல் பலவகைச் சிறப்புக்களைக் கொண்டிலங்குகின்றது. நோயை அறிதல், அதைத் தீர்க்கும் மருந்தை இனங்காணுதல், மருந்தை உட்கொள்ளுதல், பத்தியம் அனுட்டித்தல், அனுமானங்களைத் தெளிவாக விளக்குதல் முதலான பல்வேறு அம்சங்களை இந் நூலகத்தே காணலாம்.

வைத்திய முறைமைக் கூடாக ஓர் இலக்கிய மரபினைப் பேணியதன்மையை இந்நூல்களிலே தரிசிக்கலாம். இலக்கிய வரலாற்றாய்வில் ஆக்க இலக்கியம் அறிவிலக்கியம் எனப்பகுத்து நோக்கும் தன்மை இத்தகைய நூல்களினாலேயே ஏற்பட்டதெனலாம்.



செய்யுளிலே செய்யப்பட்ட இந்நூலிலே உவமை உருவகம் முதலான சிறப்புக்களும் அமைந்துள்ளன. பல் வேறிடங்களில் கதிரைமலைக் கந்தன் உவமையாகப் பாடப் பட்டிருக்கின்றான். யாழ்ப்பாண மன்னர்கள் காலத்தில் கதிரைமலை பெற்றிருந்த முக்கியத்துவத்தினை இதனூடு நாம் கண்டு கொள்ளலாம். கதிரைமலை எங்கு அமைந்திருந்தது என்று ஆய்வாளர்களிடையே கருத்து வேறுபாடு உண்டு.

இவ்வைத்திய நூலில் இடம்பெறும் பெரும்பாலான செய்யுள்கள் பெண்களை விளித்துப் பாடுவனவாகவே காணப்படுகின்றன. இத்தகைய தன்மைக்கு எமது இலக்கிய மரபிறுக்கமே காரணமெனலாம்.

பரராசசேகரம் சுட்டுகின்ற மூலிகைகளைப் பட்டியல் போட்டுக்காட்டுவதும், அவற்றை அடையாளங் காணக் கூடிய வழி வகைகளை மேற்கொள்வதும் இன்று மிகச்சிரமமானதாகவே இருக்கும். அதற்கான வழிவகைகளையும் இத் துறைசார் நிபுணர்கள் மேற்கொள்ள வேண்டும்.

எமது பண்பாட்டின் பலத்தை நிறுவும் இத்தகைய வைத்திய முறைமைகள் பேணிப்பாதுகாக்கப்பட வேண்டும். அதற்காக இத்தகைய நூல்களைப் பேணிப்பாதுகாப்பது மிக மிக அவசியமாகும். வேகமும் பரபரப்பும் நவீனத்துவமும் எமது பொழுதையெல்லாம் விழுங்கிக் கொண்டிருக்கும் இக்கால கட்டத்திலே இந்நூலைப் பதிப்பித்து வெளியிட வந்த நல்லுள்ளங்களை நிச்சயமாகப் பாராட்டவேண்டும். எதையும் வணிகநோக்கிலே பார்த்துச் செயற்படும் இன்றைய சமூகத்திலே பழமையைப் பாதுகாத்து எதிர்காலத் தலைமுறைக்குக் கையளிக்க வேண்டுமென்ற நோக்குடன் இந்நூலை அச்சிட்டு வெளியிடும் வெளியீட்டாளர்களை மனதார நேசிக்கின்றேன். பாராட்டுகின்றேன். அவர்கள் பணிதொடர்வதாக.

**கலாநிதி, எஸ். சிவலிங்கராஜா**
தலைவர்
தமிழ்த் துறை.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
11/11/1999

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | பித்ததோஷமதிகரித்தற்கு ஏது | 1 |
| 2. | பித்ததோஷமதிகரித்த குறி | 1 |
| 3. | வேறோர் பிரதியிலுள்ளன. | 2 |
| 4. | பித்த மதிகரித்தலால் பிறக்கும் வேறு நோய்கள் | 2 |
| 5. | இனி பித்தம் நாற்பதின் குணமறியும் படி | 3 |
| 6. | வாயுவிற் பித்தம் | 3 |
| 7. | பித்ததிற் பித்தம் | 3 |
| 8. | சேற்பன பித்தம் | 3 |
| 9. | வெள்ளைப் பித்தம் அல்லது சோகைப் பித்தம் | 4 |
| 10. | மூலப் பித்தம் | 4 |
| 11. | அதிசார பித்தம் | 4 |
| 12. | மூளைப் பித்தம் | 4 |
| 13. | மஞ்சட் பித்தம் அல்லது செங்கண்மாரி | 4 |
| 14. | செங்கண்மாரியிற் தீக்குணம் | 5 |
| 15. | அதிக பித்தம் | 5 |
| 16. | கரும்பித்தம் அல்லது விடபித்தம் | 5 |
| 17. | அறிவிழந்த பித்தம் | 5 |
| 18. | மருத்தீட்டுப் பித்தம் | 6 |
| 19. | மேகப் பித்தம் | 6 |
| 20. | பித்தரோக நிதானம் | 6 |
| 21. | பித்தம் 40ன் பெயர் | 7 |
| 22. | காசபித்தம் | 7 |
| 23. | வாத பித்தம் | 7 |
| 24. | வரட்சி பித்தம் | 8 |
| 25. | பயித்திய பித்தம் | 8 |
| 26. | பூதபித்தம் | 8 |
| 27. | ஆனந்த பித்தம | 8 |
| 28. | ஆகோர பித்தம் | 8 |
| 29. | கரும் பித்தம் | 8 |
| 30. | சீத பித்தம் | 8 |
| 31. | அடும் பித்தம் | 9 |
| 32. | அலட்டு பித்தம் | 9 |
| 33. | அதிக பித்தம் | 9 |
| 34. | வாயூறு பித்தம் | 9 |
| 35. | சுழற்று பித்தம் | 9 |
| 36. | சத்தி பித்தம் | 9 |
| 37. | சேற்பன பித்தம் | 10 |
| 38. | உலர்த்து பித்தம் | 10 |
| 39. | பிதற்று பித்தம் | 10 |
| 40. | எடுக்கும் பித்தம் | 10 |
| 41. | நடுக்கு பித்தம் | 10 |
| 42. | மவுன பித்தம் | 10 |
| 43. | கடும் பித்தம் | 11 |
| 44. | வாயு பித்தம் | 11 |
| 45. | உறங்கு பித்தம் | 11 |
| 46. | கெடாத பித்தம் | 11 |
| 47. | விடும் பித்தம் | 11 |
| 48. | விடாத பித்தம் | 11 |
| 49. | செம் பித்தம் | 12 |
| 50. | உட்டண பித்தம் | 12 |
| 51. | உரோக பித்தம் | 12 |
| 52. | அவிகாய பித்தம் | 12 |
| 53. | அந்தர பித்தம் | 12 |
| 54. | ஏறு பித்தம் | 12 |
| 55. | விறும பித்தம் | 12 |
| 56. | விசர்ப் பித்தம் | 13 |
| 57. | மத்த பித்தம் | 13 |
| 58. | மயக்கு பித்தம் | 13 |
| 59. | இறங்கு பித்தம் | 13 |
| 60. | சர்வ பித்தம் | 13 |
| 61. | ஓடும் பித்தம் | 13 |

## சிகிச்சை


62. பரங்கியாதி சூரணம் 14
63. ஏலாதிச் சூரணம் 14
64. எரிபித்தம் பித்தவாயுவுக்கு திராட்சாதி சூரணம் 15
65. ரோகாரிச் சூரணம் 15
66. பித்தசங்காரிச் சூரணம் 16
67. அமிர்த ஏலாதிச் சூரணம் 17
68. பித்தபாண்டு சோகை முதலியவற்றிற்கு மண்டூரச்சூரணம் 18
69. மூளைப் பித்தம் கைமயக்கு முதலியவற்றிற்கு 20
70. பயித்தியத்துக்கு குடிநீர் 20
71. அறிவிழந்தபித்தம் மருத்தீட்டுப் பித்தம் முதலியவற்றுக்கு 20
72. பித்த சூரைக்கு, குடிமருந்து 21
73. உலர்த்து பித்தத்துக்கு உண்டை 22
74. குடிநீர் 22
75. இரத்தபித்ததுக்கு தாமரைவளையச் சூரணம் 22
76. வாயால் இரத்தமெடுத்தல் 23
77. மூத்திர வழியில் இரத்த பித்தத்துக்கு 23
78. அபானத்தில் இரத்த பித்தத்துக்கு 23
79. இரத்தபித்தம் மேல்நோக்கிப் பிதற்றினால் 23
80. தாமரைவளைய நெய் 23
81. நாயுருவி நெய் 24
82. மஞ்சட்பித்தம் செங்கண்மாரிக்கு 25
83. சீதேவி நெய் 25
84. பித்தத்தில் வெப்புப்பற்றின குணம் 26
85. சிகிச்சை 26
86. பஞ்சதாரைச் சூரணம் 26
87. சகல பித்தத்திற்கும் பொன்னாங்காணி நெய் 26
88. நீற்றுப் பூசனி நெய் 27
89. சீந்தில் நெய் 29
90. கற்கம் 30
91. பித்தாரிச் சூரணம் 31
92. மகிழம்பூச்சந்தனாதியெண்ணெய் 31
93. புளியெண்ணெய் 31
94. சிற்றமட்டியெண்ணெய் 32
95. குமரியெண்ணெய் 32
96. இளநீரெண்ணெய் 33
97. மூக்கூட்டுப் புளியெண்ணெய் 33
98. சிறுகீரைத் தைலம் 34
99. புளியெண்ணெய் 34
100. வில்வப் பாணி 34
101. வயிற்றெரிவு பித்தத்திற்கு 35
102. எலுமிச்சம்பழப் பானம் 35
103. சுரசம் 35
104. மருட்பித்தம் முதலியவற்றிற்கு பூசினி நெய் 36
105. சுரசம் 36
106. முசு முசுக்கை நெய் 37
107. பின்னிணைப்புக்கள் 38 - 44

உ
சிவமயம்

# பரராச சேகரம்

## ஒன்பதாவது
## பித்தரோக நிதானமும் சிகிச்சையும்

தென்றமிழ் முனிவ னந்நாட் செப்பிய வாயுள் வேதத்
தொன்றிய பேதந் தன்னி லுற்றிடு பித்த ரோகம்
துன்றிய பெயர்கு ணங்கள் தோற்றுசாத் தியத்தி னோடு
கன்றிய வசாத்தி யங்கண் மருந்திவை கழற லுற்றாம். 1

### பித்ததோஷமதிகரித்தற்கு ஏது

வெய்யிலி னடக்கை யாலும் வெம்பசி மிகுந்த லாலும்
துய்யதோர் நறுநெய் யான்பால் துய்த்தலை விடுத்த லாலும்
நையவே[1] வருங்கோ பத்தை நண்ணலாற் கசப்பை[2] நாளும்
கையுறு வுண்ண லாலுங் கதித்திடும் பித்த தோஷம் 2

பித்தத்தை விளைக்கு[3] மென்று பேசிய வுணவை நாளும்
மெத்தவே யருந்த லாலு மிகுந்திடு துயரத் தாலும்
நித்திரை யிலாமை யாலு நினைவுகண் மிகுத்த லாலும்
மற்றுள வேது[4] வாலும் வர்த்திக்கும்[5] பித்த தோஷம் 3

### பித்ததோஷம் அதிகரித்த குறி

பித்தந்தா னதிகரிக்கில் வெதுப்புண்[6] டாகும்
பெலத்திடுமே கிறுகிறுப்புச் சத்தி குன்மம்
கைத்துவா யூறியே யருவ ருக்குங்
கண்ணிரண்டு மஞ்சனிற மாகிக் காட்டும்
சத்திபித்த மாவெடுக்கு மிறங்கா தன்னஞ்
சரீரமிக வற்றியே பெலமுங் குன்றும்
சித்தமது பேதமாய்ப்[7] பலபி தற்றுஞ்
சினமதிக மாயிருக்கு முறக்கம் வாரா 4

உறக்கமதிற் கனவுபல பேத மாகு
முறும்பித்த சன்னியுடன் கழிச்சல் தாகம்
மறப்பதிக மாயிருக்கும் பேய்போ லாடும்
வகுத்தபித்த பாண்டுவொடு புளிதா கிக்கும்[8]
உறப்பிடித்த பிடியதனை விடாமற் பேசு
முடனடுக்கந் திமிருண்டா மிரவிற் காயும்
நிறப்புடனே[9] நீர்கடுக்கு மழுது சோரு
நீர்கண்ணி லுண்டாகு நினைவ ழிக்கும். 5

நடுக்கிடுஞ் சுழற்சி செய்யு நாடொறு மிரவிற் காயும்
திடுக்கிடு நடுக்கி யேறுந்[10] தீண்மறந் தோங்கா ளிக்கும்
மிடுக்குறுங் கிறுகி றுக்கு மிகுதிநித் திரையும் வாரா
அடுக்குறு மலச லங்க ளங்கமு மஞ்சள் போலாம். 6

மஞ்சள்போன் றங்க மெங்கும் வற்றிடுஞ் சரீரம் புண்போல்
மிஞ்சிடப் பேசிப் பேசி வெறிகொடு பிதற்றிப் பேசும்
கெஞ்சிடக் கனவுங் காட்டுங் கெடுத்திடு மறிவு தன்னை
அஞ்சிடச் சன்னி தோன்று மழுதிடுங் கழிச்ச லுண்டாம் 7

உண்டியு மோங்கா ளித்தே யுலர்ந்திடுஞ் சரீரம் வற்றி
மிண்டிடுங் காச முண்டாம் வெறியென விசர்போற் பேசும்
கொண்டிடு மசனந்[11] தன்னைக் குமட்டியே சத்தி செய்யும்
அண்டிடும் பித்தஞ் செய்யுங் குணமிது மனேக முண்டே 8

**வேறோர் பிரதியிலுள்ளன.**

உற்றெழும் பித்த மெய்நொந் துளைந்துகால் கரங்க ளெல்லாம்
மெத்தவுங் கடுக்கு மேனி வெம்புநா வரட்சி கொள்ளும்
நித்தமுங் கிறுகி றென்றே நெஞ்செரித் தீரல் சுட்டு
மத்திய மயக்கம் வேர்வை வந்திடிற் பித்த மாமே. 9

வந்திடும் பித்தங் கால்கை வருந்தவே யெரித்த முற்றி
நொந்துடல் பொருக்கெ முந்து நுவன்றிடுந் தாதுங் கெட்டுச்
சிந்திடுங் கண்ணெரிந்து சிவந்திடுங் கன்ம யங்கும்
வந்துநீ ரிறங்கும் போது வசமறக் கடுத்து வீழும் 10

## பித்தமதிகரித்தலால் பிறக்கும் வேறு நோய்கள்

பித்தமே யதிக ரித்தாற் பெருத்திடுங் கசமுங் காசம்
மெத்தவே வீக்கந் தோன்று மிகுத்திடு முளர்த்து சூலை
ஒத்ததோ ரிரத்த குன்ம மோடிய குடல்வா தங்கள்
எய்த்திடு செங்கண் மாரி யின்னமு மனேக நோய்கள் 11





# இனி, பித்தம் நாற்பதின் குணமறியும்படி

## 1. வாயுவிற் பித்தம்

வாயுவிற் பித்த மாகில் வலித்தழ லெரித்துக் காட்டும்
ஏயதோ ரசனந் தண்ணீ ரெதிரெடுத் தருவ ருக்கும்
சாயவே யுடம்பு நொந்து சந்துகா லுளைந்து காந்திப்
பேய்கள் போன் மந்தம் பற்றிப் பெலன்மிகக் குறைக்குங்காணே 12

பொருமிடுஞ் சரீர முற்றும் போதநெஞ் சிடித்துத் தொய்வாய்
இருமிடு முகமும் வீங்கு மேதமாய்க்கடுக்கு மேனி
மருவிடும் பசியு மின்றி மலக்கிடு நடுக்க முண்டாம்
பெருகிடும் வாயு பித்தஞ் செய்குணம் பேசுங் காலே 13

## உ. பித்தத்திற் பித்தம்

பித்தத்திற் பித்த மாகிற் பிடரி நோங் கிறுகி றுக்கும்
சத்தியு மற்ப மாகுஞ் சரீரத்தி லெரிவுண் டாகும்
அத்தியா யுலரு மேனி யங்கமு நோவுண் டாகும்
வத்திய மேனி தானும் வசங்கெட வீங்கு மோர்கால் 14

உயிர்த்திடும் பயமுண் டாகி யுரைபல பிதற்றிப் பேசும்
செயிர்த்திடு மயக்கி யேறித் திமிர்த்திடு நடுக்க முண்டாம்
அயிர்த்திடு மன்னந் தேடி யருப்பல விகாரஞ் செய்யும்
பயித்திய பித்தஞ் செய்யுங் குணமிவை பகருங் காலே 15

## 3. சேற்பன பித்தம்

சேற்பனந் தொடர்ந்த பித்தஞ் செய்குறி யியம்பக் கேண்மின்
வேர்த்துடல் பட்டு நெஞ்சும் வெதும்பியே யருவ ருக்கும்
மாற்றமா யுடம்பு நொந்து மஞ்சணித் திளைப்பு முண்டாம்
தோற்றுட னடுக்கி யென்றுந் துயர்செயுங் குணங்க ளாமே 16

வேர்த்திடும் வெதும்பு மேனி வெறியெனக் கண்ணு மின்னும்
சேர்த்திடக் கையுங் காலுந் திடுக்குற நடுக்க முண்டாம்
ஆர்த்திட விருமித் தொய்வா யதிகமாய் மயக்கி யேறும்
கூர்த்திடுஞ் சேற்ப பித்தஞ் செய்குணங் கூறுங்காலே 17

இயம்பிய பித்தந் தானு மெய்திய விருதயத்தில்
மயக்கவே யருவ ருத்து வாயினா லெடுக்கும் பித்தம்
தியங்கிடு மசனஞ் செல்லா தேக்கிடும் பின்னே நின்று
தயங்கிய மலச லங்க டான்சிவந் திருக்கு மன்றே 18

## 4. வெள்ளைப் பித்தம் அல்லது சோகைப் பித்தம்

மறஞ்செயும் வெள்ளைப் பித்த மயக்கிடுஞ் சோப மாகும்
நிறங்குன்றித் தலைவ லித்து நின்றுநின் றுவாந்தி செய்யும்
உறுங்கைகால் கனன்று வெப்பாம் பொருத்தெலா மூதைவிம்மும்
புறந்தரு சோகைப் பித்தம் பொருதிடுங் குணங்க டாமே 19

காலொடு வயிற்றி லுற்றாற் காமொடு கண்கள் தாழும்
சாலவே சிரத்தில் நொந்து தன்னுடல் கொள்ளாதன்னம்
மேலது வருந்தி நொந்து மின்னென மயங்குங் கண்ணும்
ஆலவேல் விழியி னாளே யறிந்துகொள் பித்தமாமே 20

## 5. மூலப்பித்தம்

அன்னங் குறைந்தே யிடுப்புளையு மபானஞ் சுருங்கிமலம்வரளும்
உன்னுந் தாது மறக்கழியு முரமுங்கு றைந்துள்ளுதையுண்டாம்
மன்னுங் கைகால் கண்முகமு மலநீர் மஞ்ச ணிறம்வெ ளுக்கில்
முன்னோ ரவரே யுரைக்கின்றார் மூலப் பித்த மிதுவென்றே 21

## 6. அதிசார பித்தம்

அதிசார பித்தஞ் செய்யுங் குணத்தினை யறிய வேண்டில்
புதைவாகுங் கைகால் வீங்கும் பொருமிடுங் கழிச்ச லுண்டாம்
சதியாகு முடலுங் கைகால் தளரவே காந்த லுண்டாம்
மதியாரு முகத்தி னாளே மதித்திடு குணங்க டாடே 22

## 7. மூளைப் பித்தம்

சிரமுறு மூளை தன்னிற் சென்றிடும் பித்த மாகில்
மரமது நின்றாற் போல வார்த்தைகள் பலவும் பேசும்
உரமுறு பெலமுங் குன்றி யூதையுண் டாகி நாளும்
சுரமொடு காலு மோய்ந்து கண்களும் புகையுங் காணே 23

## 8. மஞ்சட்பித்தம் அல்லது செங்கண்மாரி

வாநீர் சுழற்றும் வெயிற்கண்டான் மறுகியுடலுமெரிப்பெடுக்கும்
தானே சிலகாற் றலைசுழற்றுந் தரையி னடக்கிற் கிறுகிறெனும்
தேனே மஞ்சட் குளித்தாப்போற் றேக முழுது நிறமாகும்
மானே செங்கண் மாரியிது மஞ்சட் பித்த குணமாமே 24





கையொடு காலு நீருங் கடுத்துடன் சிவந்து வீழும்
மெய்யெலாம் பசுமை யன்றி வெதும்பிடுங் கிறுகி றென்னும்
துய்யகண் ணுறக்கங் கொள்ளா துயங்கிடு முடல்வே றாகும்
மையிடும் விழியாய் செங்கண் மாரியின் குணமி தாமே 25

சோறுஞ் செறுத்துச் செல்லாது தூக்கமுடனே தலைவ லிக்கும்
நீறும் வெதும்புங் கண்களெலா நீட்டின் மேல்கால் கைகடுக்கும்
சீறுங் கொடிபோன் மடவீரே செங்கண் மாரி நோயிதென்று
கூறும் பெரியொர் தாமாய்ந்து கொடிய நோயென் றுரைத்தாரே 26

## செங்கண்மாரியிற்றீக்குணம்

மலஞ்சல முடம்பு கண்முகங் கைகால்
மஞ்சளி னிறமதாய்த் தோன்றும்
நலங்கிட வுடலிற் றடித்துமெய் சொறிந்து
நவின்றதோ ருணவெலாம் வெறுக்கும்
கலந்திடுஞ் சுரமும் வயிறெரிந் துடம்புங்
கடுத்துமே லுளைந்துகண் ணீங்கும்
நிலந்தனிற் செங்கண் மாரியா மலமும்
வெளுத்துநீர் கடுத்திடிற் றீதே 27

## 9. அதிகபித்தம்

மெய்யே நடுக்குத் தலைவலிக்கு மேனிதளருங் கண்வே ளுக்கும்
பொய்யேயுரைக்குங் கிறுகிறுக்கும் புள்ளிக்கனல் போற்பொறிபறக்கும்
கைகாலயர்ந்து தள்ளிவிழுங் கண்ணுமுகமு மஞ்ச ணிக்கும்
ஐயமிகவும் வாய்வெருவு மதிக பித்த ரோகமிதே 28

## 10. கரும்பித்தம் அல்லது விடபித்தம்

கண்ணும் பல்லு முகமலநீர் கைகால் நகமுங் கறுத்திருக்கும்
எண்ணுந் துடிபோல் நெஞ்சிடிக்கு மீரற்குலைமேற்படபடெனும்
மண்ணி னடக்கிற் கிறுகிறுத்து வலைபோற் கண்ணுந்தெரியாதால்
எண்ணிச் சொல்லு மிக்குணங்கள் விடமாம் பித்த மென்றறியே 29

## 11. அறிவிழந்த பித்தம்

சுக்கிலத்தில் நாடிவழி பித்தஞ் சென்று
சோதியிதை யத்தோடு சிரத்தி லெய்தித்
தக்கவமு தத்தானஞ் சென்றக் காலே
சாருகின்ற குணங்குறிகள் சாற்றக் கேளாய்
தொக்குமுத லைம்பொறியும் பேத மாகிச்

சொற்பிரமை நகைபாட லாட லோடல்
மிக்ககரும் பித்தத்தா லிக்குணங்கள்
விளையுமறி விழுந்தபித்த மென்று தேரே 30

## 12. மருத்தீட்டுப் பித்தம்

மாதர்செயுங் கைமயக்காற் பிரமை யேறி
வருங்குணத்தை வகுத்துரைக்க மானே கேளாய்
போதமற வுடம்புவற்றிக் கைகா லோய்ந்து
புலப்பமிகுந் திடுநகைக்கும் போலப் பாடும்
சோதினைநித் திரையுமின்றி யிரும லாகித்
துப்புதன்மீன் றுடக்கேபோற் புலாலு நாறும்
வேதமறைந் திடுமிதுவு மசாத்ய மென்ன
விளம்பினர்முன் னோரதைநீ தேர்ந்து பாரே 31

மாதர் மயக்கின் மருத்தீட்டில் வந்தே யிருமல் புலால் நாறும்
சேத மிகவே பத்தியமுஞ் செரியா தாகி யேப்பமிடும்
வாத மிகுமே கடிதடத்தில் வந்தே யிரும லீழையதாய்
நீதி பயில்சேர் சிரமதனில் நின்றே மயக்கிக் கொண்டிடுமே 32

## 13. மேகப் பித்தம்

கருதரிய மேகபித்த குணங்க ளெல்லாம்
கண்டுகொள்வை சுரமென்மேற் காய்ந்து வற்றும்
இருவிழிகள் புகைந்திடுங்கால் கரமு மோயு
மிடருறவே தாகபர தாப மாகும்
புருவநடு வினிலிடிக்கு மழற்றி யோடும்
பொங்கிடுநீர் மஞ்சளதைக் கரைத்தாற் போலாம்
மருவுசலம் வீழ்தலினிந் திரியம் வீழும்
மங்கையரே யறிவையசாத் தியம தாமே 33

பரராசசேகரப் பிரதிகளில் குணங்கள் கூறும்பகுதி இவ்வளவோடு முடிவடைய மேல் மருந்து கூறப்படுகிறது. இதன்கீழ் வருவன வேறுபிரதியிலுள்ளன. இதனை செகராசசேகரம் என்பர்.

## பித்தரோகநிதானம்

அருத்தியு ளாயுள் வேத மறைந்திடும் பேதந் தன்னில்
உருத்திகழ் பித்த நாற்ப துடனதற் குரிய பேரைக்
குருத் திகழ் கமல மூர்த்தி குலவிய வருளி னாலே
திருத்திக முலகின் மீது தெரிந்தவா செப்ப லுற்றாம் 34





## பித்தம் 40 – ன் பெயர்

உற்றிடுங் காச பித்த மோதிய வாத பித்தம்
சொற்றிடும் வரட்சி பித்தந் துயருறு சுழற்று பித்தம்
செற்றிடுஞ் சத்தி பித்தஞ் சேற்பன பித்தந் தேகம்
வற்றிடு முலர்த்து பித்தம் வசமறப் பிதற்றும் பித்தம் 35

பித்தமா யெடுக்கும் பித்தம் பேதித்து நடுக்கும் பித்தம்
சத்தமா மவுன பித்தந் துயருற வோடும் பித்தம்
சத்தமார் கடிய பித்தஞ் சாற்றிய வாயுப் பித்தம்
சித்தமா யுறங்கும் பித்தஞ் செம்பித்தஞ் சீத பித்தம் 36

சீதமாய் மயக்கும் பித்தஞ் செப்பிய வகோர பித்தம்
பேதமா யலட்டும் பித்தம் பெருத்துவா யூறும் பித்தம்
ஏதமா யேறும் பித்த மிலங்குமந் தரத்திற் பித்தம்
சேதமா யிறங்கு பித்தந் தியக்கிடுங் கபால பித்தம் 37

கபாலமார் பூதபித்தங் பரும்பித்த முரோக பித்தம்
அபாயமா ரதிக பித்த மடும்பித்த மரோசி பித்தம்
உபாயமார் விறும பித்தந் துயர்செயா னந்த பித்தம்
குபாயமார் கெடாத பித்தங் கூறுமுட் டணமோர் பித்தம் 38

ஒருதனி விடாத பித்த மோதிடும் விசரின் பித்தம்
தருமவிகாய பித்தஞ் சார்சயித்தி யத்தின் பித்தம்
உருமிகு மந்த பித்த மோதின மினிமே விட்டால்
வருமதின் குணமுஞ் செய்ய வகுத்திடு மருந்துஞ் சொல்வாம்

## 1. காசபித்தம்

காசமாய்ப் பிதற்றிப் பேசிக் கடுந்திடும் பேச்சு மேச்சும்
நேசமா யிருந்து சோம்பி நித்திரை யுறக்கம் வாராப்
பாசமா யொருவர் செய்த பிழைபெனப் பலவுஞ் சொல்லும்
வாசமார் காச பித்தஞ் செய்குணம் வகுக்குங் காலே 39

## 2. வாதபித்தம்

பொருமிடுஞ் சரீர முற்றும் போதநெஞ் சிடித்துத் தொய்வாய்
இருமிடு முகமும் வீங்கு மேதமாய்ச் சடுக்கு மேனி
மருவிடும் பசியு மின்றி மலக்கிடு நடுக்க முண்டாம்
பெருகிடு வாத பித்தஞ் செய்குணம் பேசுங் காலே 40

## 3. வரட்சிபித்தம்

தலையும் வலித்தே யுடம்புலர்ந்து தாதுங் கெட்டுத் துயருண்டாய்
வலைமுன் றோன்றுங் கண்போல மனமு மடிந்து மயக்கமுமாய்
நிலையுங் கெடவே மறப்புண்டாய் நினையாத னேகங்கனவுண்டாம்
அலையும் பித்த வரட்சியென்றே யறையுங் குணங்க ளிவையாமே 41

## 4. பயித்திய பித்தம்

உயிர்த்திடும் பயமுண்டாகி யுரைபல பிதற்றி பேசிச்
செயிர்த்திடு மயக்கியேறித் திமிர்த்திடு நடுக்க முண்டாம்
அயிர்த்திடு மன்னந்தேடி யழும்பல விகாரஞ் செய்யும்
பயித்திய பித்த வாயு செய்குணம் பகருங் காலே 42

## 5. பூதபித்தம்

சிரத்தினின் மயக்கி யேறித் திமிர்த்திடுந் தெளிவுண் டாகி
உயிர்த்திடும் பசாசு போல வுரைத்திடு நடுக்க முண்டாம்
சரத்தினைக் கயலை வாளைச் சதித்திடு நயன மின்னே
வரத்தினிற் பூத பித்தஞ் செய்குணம் வகுக்குங் காலே 43

## 6. ஆனந்த பித்தம்

இருந்திடு மழுது சோம்பி யேதமா யறிவு கேடாய்ப்
பொருந்திடும் புத்தி போலப் போதமாய்ப் பலவும் பேசும்
அருந்திடு மன்னம் போத மடிக்கடி மயக்கி யேறும்
வருந்திடா னந்த பித்தஞ் செய்குணம் வகுக்குங் காலே 44

## 7. அகோர பித்தம்

நடுக்கிடு மயக்கி யேறி நல்கிடுங் கோப முண்டாம்
திடுக்கிடுஞ் சன்னி போலத் தியக்கிடும் பயமுண் டாகும்
வடுப்பிள வனைய வுண்கண் வகிர்மதிப் புருவ மின்னே
அடுக்குறு மகோர பித்தஞ் செய்குண மறையுங் காலே 45

## 8. கரும் பித்தம்

காய்ந்திடு நடுக்க முண்டாய்க் கழிந்திடுங் கரிப்போ லேதான்
ஓய்ந்திடுங் கையுங் காலு முருத்துட னோங்கா ளிக்கும்
சாய்ந்திடு மயக்கி யேறிச் சதிசெயுங் களையுண் டாகும்
ஏய்ந்திடுங் கரிய பித்தஞ் செய்குண மியம்புங் காலே 46

## 9. சீதபித்தம்

குளிர்ந்திடுந் திமிருண் டாகிக் குதறியே நடுக்க முண்டாய்





எழுந்திடும் பதறி யேங்கி யேதமாய் மயக்கி யேறும்
விழுந்திடு மவல மாக விதமுறப் பலவும் பேசும்
அழுந்திடுஞ் சீதபித்தஞ் செய்குண மறையுங் காலே 47

## 10. அடும்பித்தம்

வற்றிடுஞ் சரீர மேனி வாடிடு மயக்கி யேறும்
சுற்றிடுங் கிறுகி றுத்துத் துயரமாய்க் கண்ணு மின்னும்
உற்றிடு முணவுஞ் செல்லா துவாந்தியா யோங்கா ளிக்கும்
செற்றிடு மடும்பித் தத்தின் குணமெனச் செப்பி னாரே 48

## 11. அலட்டுபித்தம்

அலட்டிடும் பேய்போ லேறி யழுதிடு மயக்க முண்டாம்
உலர்த்திடு மேனி வாடி யுவாதியா யோங்கா ளிக்கும்
பெலத்திடும் பேதஞ் செய்யும் பெருத்திடும் வாய்நீ ரூறும்
கலற்றிடு மலட்டு பித்தஞ் செய்குணங் கழறுங் காலே 49

## 12. அதிகபித்தம்

உருத்திடுங் கோப முண்டா யுதறிடு நடுக்கி யேறும்
வருத்திடுங் கண்ணு மின்னி மஞ்சள்போ லோங்கா ளிக்கும்
அருத்திடு மன்னஞ் செல்லா ததிகமாய் வாய்கைப் புண்டாம்
பெருத்திடு மதிக பித்தஞ் செய்குணம் பேசுங் காலே 50

## 13. வாயூறு பித்தம்

தானே மயக்கிக் கிறுகிறுத்துத் தரியா துடனே பகைத்தேறி
ஊனே யுலர்ந்து படபடென வோங்காளித்து வாயூறும்
மானேர் விழியு மதிமுகமும் வாயுங் கனிபோ லுளமயிலே
வாய்நீ ரூறும் பித்தமிது வகையா லறிந்து மருந்துசெய்யே 51

## 14. சுழற்றுபித்தம்

சுற்றியே நடுக்கி யேறிச் சுழற்றியே கிறுதி யுண்டாய்ப்
பற்றியே கோப மிஞ்சிப் பயமுட னடுக்க முண்டாம்
துற்றுறும் வடுவை மானைத் துரத்திடு நயன மின்னே
வுற்றியே சுழற்றும் பித்தம் வருத்திடுங் குணமி தாமே 52

## 15. சத்திபித்தம்

வயிற்றினிற் புரட்டி வாய்நீர் வசமறப் பெருத்தே யூறி
உயிர்ப்பற வோங்கா ளிக்கு முபாதியாய் நடுக்கி வேர்க்கும்
செயிர்ப்புறுங் கணையை வேலைச் செற்றிடு நயன மின்னே
அயிர்ப்புறுஞ் சத்தி பித்தஞ் செய்குண மறையுங் காலே 53

## 16. சேற்பனபித்தம்

வேர்த்திடும் வெதும்பு மேனி வெறியெனக் கண்ணு மின்னும்
சேர்த்திடுங் கையுங் காலுந் திடுக்குற நடுக்க முண்டாம்
ஆர்த்திட விருமித் தொய்வா யுதிகமாய் மயக்கி யேறும்
கூர்த்திடுஞ் சேட பித்தஞ் செய்குணங் கூறுங் காலே 54

## 17. உலர்த்துபித்தம்

உருமிகு மேனி வாடி யுலர்ந்திடு நடுக்க முண்டாம்
திருமிகு நயன மின்னித் தீன்மறந் தோங்கா ளிக்கும்
வருசல மஞ்சட் போல வரண்டிடு மலமு மென்பர்
தரமிகு முலர்த்து பித்தஞ் செய்குணஞ் சாற்றுங் காலே 55

## 18. பிதற்றுபித்தம்

அன்னமு மருந்தி மிண்டி யலட்டியே பிதற்றிப் பேசிச்
சொன்னதோர் கரும நாளுஞ் சொல்லிடுங் கோப முண்டாம்
கன்னலைக் கனியைப் பாலைக் கண்டினைக் கறுக்குஞ் சொல்லாய்
பின்னமாய்ப் பிதற்றும் பித்தஞ் செய்குணம் பேசுங் காலே 56

## 19. எடுக்கும்பித்தம்

மனத்தினை மறுகி வேர்த்து மஞ்சள்போ லோங்கா ளிக்கும்
இனத்துடன் பகைக்கும் போல வேதமாய் நடுக்க முண்டாம்
அனத்தினைப் பிடியை வெல்லு மருநடைக் கமல மின்னே
சினத்துட னெடுக்கும் பித்தஞ் செய்குணஞ் செப்புங் காலே 57

## 20. நடுக்குபித்தம்

வருந்திட நடுக்கும் வீழ்ததி மயக்கிடு மெழுப்பொ ணாது
பொருந்திடு நயன மின்னிப் பொருக்கெனச் சுழலு மேனி
திருந்திடுங் கயலை மானைச் செறுத்திடு நயன மின்னே
இருந்திட நடுக்கும் பித்தஞ் செய்குண மியம்புங் காலே 58

## 21. மவுனபித்தம்

கூசிடும் பேச்சு மின்றிக் குத்திமெய் நடுக்கி வீழ்த்திப்
பேசிடும் பயமுண் டாகிப் பித்தென விருந்து சோம்பும்
தேசிடும் வடுவை மானைச் சீறிடு நயன மின்னே
காசிடு மவுன பித்தஞ் செய்குணங் கருதுங் காலே 59





## 22. கடும்பித்தம்

மயக்கிடுந் தலைந டுக்கும் மதிப்பறப் பகைத்துப் பேசும்
தியக்கிடு முயரவேறித் தீன்மறந் தோங்கா ளிக்கும்
வயக்கொடுங் கணையை மானை வடுவினை நிகருங் கண்ணாய்
கயக்கிடுங் கடிய பித்தஞ் செய்குணங் கழறுங் காலே 60

## 23. வாயுபித்தம்

நித்திரை யுறக்கம் போல நிலைபெற மயக்கி யேறிச்
சுத்தமாய் வாய்நீ ருறித் துயருட னடுக்க முண்டாம்
சத்தமார் குயிலைக் கிள்ளைச் சதித்திடு மருஞ்சொன் மின்னே
சித்தமார் வாயு பித்தஞ் செய்குணஞ் செப்புங் காலே 61

## 24. உறங்குபித்தம்

செயிர்த்திடுந் திமிருண் டாகித் திமிர்த்திடு நடுக்க முண்டாம்
உயிர்த்திடு மயக்கி யேறி யுறக்கமாய்க் கிடந்து சோம்பும்
கயர்த்திடுங் கனியைப் பாலைக் கண்டினைக் கறுக்குஞ் சொல்லாய்
உயிர்த்திட வுறங்கும் பித்தஞ் செய்குண முரைக்குங் காலே 62

## 25. கெடாதபித்தம்

கண்ணே சுழன்று கிறுகிறுத்துக்காலோந்துடனே தலைவலித்து
விண்ணே சுழன்று மிடுக்கற்று மிகநெஞ்சிடித்துப் பயமுண்டாய்த்
தண்ணீர் தாகித் துடல்நோவாய்ச் சலமுஞ் சிவந்துமதிமயங்கும்
பண்ணேர் மொழியாய் கெடாதபித்தம் பழகியறிந்து மருந்துசெய்யே 63

## 26. விடும்பித்தம் அல்லது உன்மத்தபித்தம்

பித்தமாய் பிதற்றி யேறிப் பேதமாய் நடுக்க முண்டாம்
சுத்தமாய்க் காசம் போலத் துயருறத் தலைநோ வுண்டாம்
நித்தமாய்க் கிறுகி றுத்து நினைவறப் பேச்சுங் காட்டும்
சித்தமாய் விடும்பித் தத்தின் செய்குணஞ் செப்புங் காலே 64

## 27. விடாதபித்தம்

ஊனமாய்ச் சரீர நொந்தே யுயரவே மயக்கி யேறி
ஈனமாய்க் கிறுகி றுக்கு மிரவினி னடுக்க முண்டாம்
கானமார் பிடரி நெஞ்சு கழுத்துடன் விறைத்து வாங்கும்
தானமார் விடாத பித்தஞ் செய்குணஞ் சாற்றும் காலே 65

## 28. செம்பித்தம்

சிவந்திடு முகமுங் கண்ணுஞ் செப்பிய மலமு நீரும்
உவந்திடு மன்னஞ் செல்லா துவாந்திக்கு மஞ்சள் போல
நிவந்திட மேனி வாடி நிலைகெட நடுக்கி வீழ்த்தும்
சுவந்திடுஞ் செம்பித் தஞ்செய் குணமெனக் கழறி னாரே 66

## 29. உட்டண பித்தம்

எரிந்திடுஞ் சரீர முற்று மேதமா யனலுண் டாகிப்
பரிந்திடு மிரவிற் காயும் பதைத்திட வெரியுங் கால்கை
சரிந்திட நடுக்க முண்டாஞ் சரீரமு முலர்ந்து வற்றும்
கரிந்திடு முட்ண பித்தஞ் செய்குணங் கழறுங் காலே 67

## 30. உரோக பித்தம்

உருமிடு நடுக்கும் வோ்க்கு முவாந்திக்குந் தலைநோ வுண்டாம்
இருமிடுங் கிறுகி றுக்கு மேதமாய்க் கண்ணு மின்னும்
பொருமிடுஞ் சரீரம் வற்றும் போதவே வெளுக்கு மேனி
தரமிகு ரோக பித்தஞ் செய்குணஞ் சாற்றுங் காலே 68

## 31. அவிகாயபித்தம்

மிடுக்கிடும் பிதற்றும் பேசு மிகுதியுங் கோப முண்டாம்
திடுக்கிடு மொருவர் செய்த பிழையினைத் தினமுஞ் சொல்லும்
அடுக்கிடும் பிதற்று மேக மலட்டிடு நடுக்க முண்டாம்
துடுக்கவி காய பித்தஞ் செய்குணஞ் சொல்லுங் காலே 69

## 32 அந்தர பித்தம்

ஏறிடு மயக்கி வோ்க்கு மிறங்கிடுந் தூயரஞ் செய்யும்
சீறிடுஞ் சிரிக்குஞ் சற்றே திமிர்த்திடு நடுக்க முண்டாம்
தேறிடுந் தெளிவுண் டாகுந் தீர்ந்திடுஞ் சிலநாள் நிற்கும்
வேறிடந் தரபித் தஞ்செய் குணமென விளம்பி னாரே 70

## 33. ஏறுபித்தம்

வயிற்றினிற் புரட்டி யேறி மயக்கியே நடுக்க முண்டாய்
உயிர்ப்புற வோங்கா ளித்தே யுண்டியு மறந்தாள் வற்றிச்
செயிர்ப்புற வாய்நீ ருறித் திமிர்த்திடுஞ் சிலநாள் நிற்கும்
பயிர்ப்புற வேறு பித்தஞ் செய்குணம் பகருங் காலே 71

## 34. விறுமபித்தம்

உண்டிடும் பேச்சு மின்றி யுறங்கிடு நடுக்க முண்டாய்க்
கொண்டிடும் புனித மாகிக் கோபமும் பயமு முண்டாம்





மிண்டிடுஞ் சிலநாள் நிற்கு மிகுதியுந் தலைநோ வுண்டாம்
கண்டிடும் விறும பித்தஞ் செய்குணங் கழறுங் காலே 72

## 35. விசர்ப்பித்தம்

கத்திடும் பிதற்றும் பேசுங் கதறிடு நடுக்க முண்டாம்
ஒத்திடு முறக்கம் வாரா துண்டியு மறந்து சோம்பும்
எய்த்திடும் பயமில் லாம லிரவினிற் கூப்பிட் டோடும்
பித்திடும் விசர்ப்பித் தத்தின குணமெனப் பேச லாமே 73

## 36. மத்த பித்தம்

பெருத்திடுஞ் செல்வ மிஞ்சிப் பேதித்து மயக்கி னாலும்
உருத்திடும் பித்த மிண்டி யுயரவே நிற்கை யாலும்
கருத்தினைக் கெடுத்து மிண்டிக் கவலையா யேச்சும் பேச்சும்
பருத்திடு மத்த பித்தஞ் செய்குணம் பறையுங் காலே 74

## 37. மயக்குபித்தம்

தியக்கிட மயக்கி யேறித் தீன்மறந் துலரு மேனி
மயக்கிடும் வாய்கைப் புண்டாய் மதிப்பற வாய்நீ ரூறும்
செயக்கிடு மதியில் லாமற் சோர்ந்திடு முறக்கம் வாராச்
சயக்கிடு மயக்கு பித்தஞ் செய்குணஞ் சாற்றும் காலே 75

## 38. இறங்குபித்தம்

உருத்திடு முயரவேறி யுவாதியாய் மயக்கி வேர்த்துப்
பெருத்திடு நடுக்க டுண்டாம் பேதியா திறங்கி மீளும்
வருத்திடுஞ் சிலநாள் நின்று மாறிடும் வரளு மேனி
அருத்திடு மிறங்கு பித்தஞ் செய்குண மறையுங் காலே 76

## 39. சர்வபித்தம்

விறைத்திடுந் திமிர்க்கு மேனி வெதும்பிடு நடுக்க முண்டாம்
குறைந்திடுஞ் சரீரம் வற்றிக் குமிறிவா யூறி நீராய்
இறைத்திடு வணசி லாகி யேதுமா யுணவுஞ் செல்லா
தறைத்திடுஞ் சர்வ பித்தஞ் செய்குண மறையுங் காலே 77

## 40. ஓடும்பித்தம்

ஓடிஇந் திரியு மெங்கு முலாவிடும் பிதற்றிப் பேசும்
வாடிடுஞ் சரீரம் வற்றி வரண்டிடு நடுக்க முண்டாம்
தேடிடும் பலவுஞ் சற்றே தீன்மறந் துறக்கம் வாராப்
பாடிடு மோடும்பித்தஞ் செய்குணம் பகருங் காலே 78

# சிகிச்சை

## பித்தம் 40 க்கும்

### பாரங்கியாதி சூரணம்

சிறுதேக்குத் திரிகடுகு விளங்க மோமஞ்
சீரியர்கள் சிற்றரத்தை சிவதை ரோணி
சிறுமூலங் கடுகோட்டஞ் செண்ப கப்பூச்
சிற்றேல நாசம்பூ மதுரந் தாரம்
கறுவாவுங் கொத்தமல்லி கராம்பு சாதி
கண்டில்வெண்ணெய் வசுவாசி கல்நார் வேதி
திரிபலையு மரிசிவகை யாறி னோடு
செங்காந்த மதிவிடயந் தெளிந்து கொள்ளே 79

எய்துரொ சினைபூர மிலாமிச் சம்வே
ரினியவெட்டி புடொலின்நா யிவையோ ரொன்று
தொய்யில்முலை மானேகேள் சமனாய்க் கூட்டித்
தூளாக்கி யிடிபொடித்துச் சீனி தூவி
ஐயமற நறுநெய்தே னுஞ்சி நீரி
லருந்திடுவை நாற்பத்து நாலு பித்தம்
வெய்யசுரம் வாய்க்கசப்பு விக்கல் சத்தி
விலகிவிடு மௌனமுனிவர் விளம்பி னாரே 80

### ஏலாதிச் சூரணம்

ஏல முட்டலை யரத்தை நாகணை
மிந்து கோட்டமிரு சீரக
மினிய செண்டமுகை மாஞ்சில் சந்தணமு
மேய ரோசினைகர்ப் பூரமும்
சோல மாமதுர தார மோடரிய
தூப மோடில வங்கமுஞ்
சொல்லு முந்திரிபே ரீஞ்சு சந்தமுறு
தூய்ய பத்திரிகண் மூன்றுமே
சால நீள்வெறிக ளைந்து வாசமவை
தானு மைந்துநெரி யரிசியுந்
தங்க மேவுருந் திராக்க மிவை
தன்னி லொக்கவிடி தூள தாய்
மேலு மோர்நிறைகொள் சீனி தூவிவிடு
வேற ருந்துமது பாலிலும்
வேறு துட்டுமிள நீரு மாகுமிது
வேக நோயகலு மாறுகேள் 81





சத்தி விக்கல்பர தாப நெஞ்சுலர்வு
தாக மோடிரும் லீழையும்
சயமுறக்குவளை கக்கு விற்புருதி
சால நீரிலழ லிசிவுமே
அத்தி யுடெழு சுரங்கள் கால்கள் கர
மழலு டம்புலர்த லாகமே
யக்கி சூலைக ளிரத்த பித்தமுட
னிவை மார்கள் கை மயக்கினே
டெய்த்த மோகமொ டிரைப்பு வாந்திகளு
மிச்சை கெட்டு மரு கக்கலோ
டெய்து வாயுறு கசப்பு நாவுலர்த
லேகு மேமுத லாதியாய்
ஒத்த சூர்ணமி தாகு முண்மையி
துணர்ந்து ணர்ந்துசெய வோதினா
ரும்பர் மாமுனிவர் தம்பிரா னிமைய
மங்கை கூரவரு ளெய்யவே 82

## எரிபித்தம் பித்தவாயுவுக்கு

### திராட்சாதி சூரணம்

முந்திரிகைப் பழஞ்சீனி கூகை நீறு
முத்தக்கா சிருவேலி மலாக்கா யோமம்
கொந்துலவு புகுன்மடவீர் கோட்டஞ் சாதி
குலவுமிருசீர்விடயங் குடசப் பாலை
மந்தமறுந் திரிகடுகு திரிபலை கார்கோல்
வாய்விளங்கங் கடுகுவசா வெள்ளை யுள்ளி
இந்தினொடு சமன் கூட்டித் தேனி லிட்டா
லெரிபித்தம் பித்தவாய் விவைகள் போமே 83

### ரோகாரிச்சூரணம்

திரிகடுகுந் திரிபலையு மரிசி யாறுஞ்[65]
சிறுமூலஞ்[66] சிறுதேக்குச் சீர மேலம்
நறுவியொடு[67] வாசமைந்து[68] முல மைந்து[69]
நலமுடைய லகிரியைந்து[70] கோட்ட மோமம்
உறுமரத்தை நாகம் பூ விளங்க மோட்டு
ரோகணிபஞ் சவன் பழுக்காய்[71] பெருங்கு ரும்பை
பேறுபுளியம் விரைத்தோடு[72] நாகம் பூவாம்
பெட்புடைய நன்னாரி யிலாமிச் சம்வேர் 84

தாமரைசெங் கழுநீருஞ் சத்த வா்க்கஞ்[73]
சாரீந்து[74] முந்திரிகை சடாமாஞ் சோலம்
காமருவு மாதளையின் பழத்தி னோடு
கதலிப்பூ[75] வெட்டிவோ் கமழ்பூஞ் சாந்து[76]
நாமருவு ரோசினையுமிவையொவ் வொன்று
நலமுறவே சமன்பொடித்து நறுநெய் தேன்பால்
பூமருவு மிஞ்சிநீ ரிவற்றிற் கொள்ளப்
போக்கிவிடும் வியாதிகளைப் புகலக் கேளே 85

அத்திசுரம் விக்கல்சத்தி யதிசா ரங்க
ளங்கிமந்தங் குரைப்பிரும[77] லாகங் காந்தல்[78]
துற்றவிளைப் பிருமல்தொண்டைக் கட்டி[79] னோடு
சுக்கிலம்வீழ் நீக்கடுப்புச் சோகந் தாகம்
கைத்தபித்தங் கைமயக்கோ டிரத்த பித்தங்
காரிகையார் பெரும்பாடு கசநோய் வெள்ளை
இற்றுவிழு[80] விவைதீரு மெனரோ காதி
யினிமையுறு மலைமுனிவ னியம்பி னானே 86

## பித்தசங்காரிச்சூரணம்

சீதை[81]சிறு கீரைபுடல் செங்கழுநீா் மூலம்
பாதிரிக ளானவரி[82] பற்பமல ரல்லி[83]
மாதளையி னீள்கனி மருக்குலவு வில்வம்
போதுலவு நாணல்[84]நந்தி நாரி[85]பெரு நெல்வோ்[86] 87

கன்னலுறு[87] சீந்தில்கமழ் வெட்டிகத லிக்காய்[88]
முன்னை[89]புவி சா்க்கரையின் மூலமொடு தூது
மின்னியிலை[90] நெல்லிமுளி[91] மிச்சு[92]நறுங் கோவை[93]
சின்னி[94]யொடு சிற்றமலி முத்தமொடு சீரே 88

கூவிளை[95]வல் லாரையறு கோடுகுல வேம்பு[96]
வாவுகுல பான்மரமொா் நாலுரிய பட்டை[97]
மேவுநறு வெள்ளரியின் வேரொடு விராலி[98]
தாவுசம னாயிடி சரக்குவகை சொல்வாம் 89





திரிடலா திரிகடுகு சிணைமலா்[99] சிறதேக்குத்
நெறிகுலாச் சீவக வகைகள்[100] மீட் டேலமும்[101]
கறுவிளாச்[102] சிவதைரோணி கடுகுராக் காசுபூ[103]
மருவுலாத் தருவு நீள் மதுரமா மதமுமே 90

கொட்ட மோடில வங்கசயிந்தமும்[105]
மட்டி[106] சொல்விளங்கநா கத்தொடு
குப்பை நாகண[107] முந்திரிகை கருமாமலா்[108]
மட்டு லாவுறு குப்பை[109] நறும்பிசின்[110]
அக்க ராநறு மஞ்சள் செருந்தமும்[111]
அக்கி தீா்சிவ சந்து விளம்பிசின்[112]
விளமூலம்[113]
கட்ட தாகவி ரைந்து சமன்கொடு
இட்ட மாயிடி பின்பு கலந்திடு
கச்சா் சீனி துளங்கனி யின்புனல்[114]
கமழ்சீதநீா்[115]
விட்ட மாவெழு மண்டல முங்கொடு
பித்தரோக சுரங்கண் மிக்கமேக விதங்கள்
தொல்லைந்திடுமிது காணுமே 91

## அமிர்த ஏலாதிச்சூரணம்

ஏலமில வங்கமதி மதுரங் கோட்ட
மியல்பான முத்தஞ்செண் பகத்தின் பூவும்
சீலமுள சந்தனஞ்செம் பிளிச்சங்கொட்டை[116]
சீரக மிரண்டினோ டிலாமிச் சம்வோ்
ஞாலமுள வெட்டிவோ் கமல மூல[117]
நறுநெய்தன் மூலமுடன்[118] கதலி முலம்
கோலமள மாதளைமுந் திரிபே ரீஞ்சு
கொழுங்கனிகஸ் தூரிவிளங் கனியி னோடே[119] 92

தானுலவு நிலப்பனையும் தண்ணீா் விட்டான்
தாளிசபத் திரிகராம்பு சாதிக் காயும்
தேனுலவு மதிவிடய மக்க றா வுந்
திறமுடைய கா்பூரங்[120] கல்நாா் தானும்
பானுலவு கண்மதங்கோ[121] ரோசி னைதான்
பத்திரிகற்[122] கடகசிங்கி கடுக்காய் தான்றி

காஹுலவும் வில்வக்காய் முள்ளி வித்துக்
கைப்புடனே களிப்பாக்குக் கும்கு மப்பூ 93

கூட்டியகூ ரணமிலைகன் மூன்று பங்கு
குலவமுத சர்க்கரையு மொருபங் காக்கி
நாட்டியதேன் வெண்ணெய்நெய்பா லிஞ்சி நீரு
நவிலுமெலு மிச்சையினிற் புளியி னோடும்
சூட்டியே வெருகடிதூள் மண்ட லங்கொள்
சுகமாகு முட்டணநோய் பித்தந் தீரும்
காட்டுகிரிச் சிணங்கள்சல மேகந் தீரும்[123]
கருதுங்கா லேலாதி காசி னிக்கே 94

## பித்தபாண்டு சோகை முதலியவற்றுக்கு
### மண்டூரச் சூரணம்

பழவிருப்புக் கிட்டம் பலநூறு கொண்டு
செழிய பசுநீர் சிறுநீர் - விழைவுபெறு
வெள்ளாட்டு நீரும் விரவியொரு தூணிவிட்டுத்
தள்ளாது மண்டலமுந் தாஹூறிக் - கொள்ளுமது
பின்னெடுத்து வேறு புளியிலைநீர் முக்கறுணி
அந்நெறியே காய்ச்சி யதிற்றோய்த்துப் பின்னெடுத்துக்
கையானீர் முக்குறுணி காய்ச்சி யதிற்றோய்த்து
.... .... .... .... .... நொய்தாய்
இடித்து வடிகொண் டிதன்மேன் மருந்து
துடித்த வரைபொடியுந் தோகையே - அடுக்காய்ப்
புத்துப் பலங்கொணர்ந்து பாரிலுள்ள நாவலிற்
பட்டைச்சாற் றிட்டுப் பரிவாக வாறியபின்
இட்டமுறு காந்தம் பதின்பலமும் - நட்டமறு
காணச்சாற்[125] றிட்டூறிக் காரிகையே தானெடுத்து
மாஹுறவே கூட்டும் மருந்துகேள் - வேணதொரு
முக்கடுகு முப்பலையு முற்பகரு முரோகணியும்
தக்க விருசீ ரகமோமம் - மிக்க தொரு
சிவதைவேர் தன்னுடனே சீந்திலின் வேரும்
நவைதீரும் வெள்ளையுள்ளி நாடும் - சுவையுள்ள
உப்பைந்து[126] காரமந்து[127] மொன்சார மைந்திஹுடன்[128]
செப்பு விளங்கஞ்[129] சிறுமூலம் - துப்பார்
அரிசிவகை யாறு மரத்தை குறா சானி
தருவோடு[130] சாதிலிங்கஞ் சாதியைந்து - டொருவரிய
கண்டில்வெண்ணெய் சோமன்மஞ்சள்[131] கஸ்தூரி மஞ்சளுடன்
விண்ட சிறுகடுகும்[132] வெண்கடுகும் - ஒண்டொடியே





நெல்லிக்காய்க் கெந்தகமு நேரியசீ ரேலமுடன்
புல்லு மதிவிடயம் பூதவர்க்கம்[133] - நல்ல
அதிமதுரங் கோட்ட மமழைவெண் குந்திருக்கம்[134]
புதியமுப் பத்திரியும் பூவையே - கதுவிய
சித்திர மூலஞ் சிறந்ததோர் வெள்ளறுகு
முத்த மவுரிமுட்[135] காவிளைவேர்[136] - உற்ற
வசம்பு சிறுதேக்கு மஞ்சிட்டி குக்கில்
நசங்கொள்ளு[137] மட்டவர்க்க நாளும் - இசங்கின்வேர்
இவையோ ரொருபல மிதனை யிடிபொடி
புதிய துகிலிடு வடிகொள வழவிடு
சுவையுள மதுவினில்[138] விரவி வெருகடி
துவள வயிலுவை பொழுது மிருபது - குவையான
எய்ப்பிளைப்பொடு சத்தி விக்கலும்
அத்தி யற்றெழு பித்த முற்றதும்
இச்சை கெட்டழல் சத்தி யிற்களை
துய்ப்பொறுத்திடு மக்கி யுற்றதும்
கக்கல் பற்றிய வெப்ப முற்றதும்
தொக்க தைத்திடு மக்குணத்தொடு - கைப்பான
சிரமுறு பித்தம் வயிறுறு பித்தம்
தெளிவறு பித்தஞ் செவியிரை பித்தம்
உளைவுறு பித்தங் கரபத பித்தம்
மதிமயல் பித்தங் கருகிடு பித்தம்
எரிவுறு பித்தம் - உரமேவும்
ஊது காமலை யாம சூலைகள்[139]
சோகை மீறிடு பார தாபமும்
ஊதை மோதிடு[140] வேக கோபினை[141]
தாது சீவித சூலை சூரைகள்[142]
தேக பாரிச நீரகள் சோரிகள்[143]
சோகை மேவிடு மூதை மேவிடல்[144] - தீதான
குன்மமதி சாரம் வன்மையுறு மாமை[145]
கொன்னுறு கவிசை[146] துன்னுறு பிலிகை
மன்னுகடல் வாயு பின்னமுறு சூரை[147]
சொன்னிகழல் வாதை யின்னவவை மாற்றும்
என்னவர னேத முன்னமறை நீதி
துன்னவறி முனிவன் னன்மைபெற வோதும்
உண்மைபெறு மாயுட் டின்மைபெறு வேதமே

## மூளைப்பித்தம் கைமயக்கு முதலியவற்றுக்கு

காணரிய கர்த்தபத்தின்[148] பால்சி றங்கை
கருதுமொரு மண்டலமுங் கடிகை தேய்த்து
நானமுற[149] வுள்ளிலுங்கொள் சீந்தி லோடே
நாற்பனாள் சம்பீரப் பழத்தின் சாற்றில்
வேணுமென மண்டங்கொள் பிரமை மாறு
மிகவுமறி விழுந்தபித்தங் கைம யக்கும்[150]
ஆணவஞ்சேர் விசர்ப்பத்த மருத்தீ டல்லா
லதிகபித்த மிவைமாறு மடைவிதாமே 96

## பயித்தியத்துக்கு குடிநீர்

பேய்ப்புடோல் முசுமு சுக்கை பேசிய கண்டங் காலி
வாய்ப்புறு செங்கத் தாரி வருமூங்கி லிலையி லந்தை
ஆக்குறு மிலையி னோடே யகில்திரி கடுகு மல்லி
நோக்குறு வாய்வி ளங்க நுவல்சிறு மூல மெல்லாம் 97

சமனிடை கூட்டி நீரிற் றகுமுறை யெட்டொன்றாக்கி
அமைவுறப் பருகி யுப்போ டரும்புளி யகற்ற நாளும்
சுமையுறப் பிதற்றி யோடித்துயர்செயும் பயித்தியங்கள்
அமைவுறத் தீருமென்றே யகத்திய னருளிச் செய்தான் 98

## அறிவிழுந்தபித்தம் மருத்தீட்டுப்பித்தம் முதலியவற்றுக்கு

ஆமலகக் கனிகோவை[151] சிறிய கீரை
யரவிந்தம் பேய்ப்புடோ லமுத வல்லி
நாமருவு கரும்பிளநீர் வெள்ள ரிக்காய்
நரிப்பயற்றி னிலைவீழி சாதி கையான்
காமருவு செங்கழுநீர்க் கிழங்கொவ் வொன்று
கருதிடிலோர் நீர்நாழி நெய்யு நாழி
சேமமுட னிந்தவகை யெல்லாங் கூட்டிச்
சேரவொரு பாண்டத்திற் சிறக்கக் காய்ச்சே 99





காய்ச்சிடுமேன் மருந்திருசீ ரகமிந் துப்புக்
கல்நார்ப்ச்[152] சிலையுடன்கச் சோலம் புட்டில்[153]
வாய்ச்சவிழா லின்னிசி கோட்ட மாஞ்சின்
மரமஞ்சள் செண்பகப்பூ மதுரந் தாரம்[154]
பாய்ச்சுகுள விந்த மஞ்சள் கொத்த மல்லி
பகர்சீரந் திப்பில்நெல்லி கூகை நீறு
தேய்ச்சிருவேல் விழியாய்நற் சந்த மேலந்
திப்பலிமூ லந்தெறுமந் திரிபே ரீஞ்சே 100

இந்திரனொடு பச்சைக்கர்ப் பூரம் பத்ரி
யேலமில வங்கமிவை யிருக முஞ்சு
சந்தமுற வரைத்தூறித் துளாவிக் காய்ச்சித்
தகுமெழுகு பதத்தில்வடி சற்றுள் ளேகொண்
டிந்துநுதன் மானேகேள் சிரசிற் றப்பி
யிரண்டுவிட்டோர் நாண்முழுகி லியம்பு கின்ற
மந்தபித்தங் கைமயக்கு மருத்தினீடு
மருவுமறி விழுந்தபித்த மாறுந் தானே 101

## பித்தசூரைக்கு குடிமருந்து

பித்தமாஞ் சூரை யென்னும் பெருங்குணங் கண்ட போதே
சுத்தநெற் பொரியுஞ் சுக்குங் கூவிளை வேருங் கூட்டி
ஒத்தவெச் செனக்கு டித்தா லோடுமே பித்த சூரை
அத்தனா ருரைத்த வுண்மை யாயுரு வேத மாமே 102

பயற்றினிற் பருப்பைப் பொங்கிப் பருகிள நீரை விட்டு
வியப்புற விரவி யிங்குப் பிழிந்ததீ ருற்றிக் கொண்டு
நயப்புறச் சீனி கூட்டி நலம்பெறக் குடித்த போதே
தியக்கிடுஞ் சத்தி மாறித் தீருமாம் பித்த சூரை 103

ளரிப்பட ஞுளைவு கூடி யிறுகியே மறுகி நிற்கில்
பருத்தசுக் கைங்க முஞ்சு பற்பமே யாக்கிக் கூட்டித்
தரிப்புற நுகர்ந்த போதே தணித்திடும் பித்த சூரை
வெருக்கொளக்[155] கண்ட போதே விருப்பட னிவற்றைச் செய்யே 104

துய்யவா வெண்ணெய் தன்னைத் துகளறக் கழுவிக் கொண்டு
வேய்யமா சயிந்தந்[156] தன்னை விரைந்தரைத் ததனிற் கூட்டிப்
டையவே விடியற் காலை பருகிடிற் பித்த சூரை
உய்வதே யில்லை யென்றே யுடலைவிட் டோடிப் போமே

சீந்தில் கனத்தசுக்குச் செய்யறுகுறுந் தொட்டியுடன்
எந்து மிருவேலி லாமிச்சுச் சந்தனமும்
வாய்ந்த விருநாழி நீர்வார்த் துழக்கானால்
போந்தமது விட்டுண்ணப் போம்பித்த சூரையதே 106

பயற்றொடு குலத்தை[157] சுக்குப் பகரிந்து பிடியே கொண்டு
வயற்சுரைத் தண்டு சீந்தில் வருங்குறுந் தொட்டி வேரும்
நயக்கடு வெட்டுங் கூட்டி நலம்பெறத் குவாத மாக்கி
இயற்கையாய் நுகரி லன்றே யெரிகுடல் முறுக்கும் போமே 107

குமரிவேர் கடுகு ரோணி குலத்தையுஞ் சுக்குக் கொற்றான்
சமனுறக் குளத்தின் பாலை சந்துமா மதுரங்[158] கூட்டி
அமரிரு நாழி நீரை யங்குழக் காக்கிக் கொண்டாற்
குமுறிய குடல்மு றுக்குங் குன்மங்கள் பலவும் போமே 108

## உலர்த்துபித்துக்கு
## உண்டை

முந்தக் காசு நன்னாரி முதிரு மிலாமிச் சிருவேலி
சத்துப் பொருந்து மிலுப்பைப்பூச் சார்முந் திரிகை பேரிஞ்சு
மெத்த விளிக்கு மதிமதுர மேலந் திப்பிலி யிவைகள் சமன்
நித்த மரைத்தே யுண்டைகொள நிலையா தேகு முலர்த்துபித்தம் 109

## குடிநீர்

இருவேலி யிலாமிச்சுச் சிறிய கீரை
யியம்புசந்த முந்திரிகைப் பழத்தி னோடு
திருவாருஞ் செங்கழுநீர்க் கிழங்கு மின்னுந்
தேடுமதி மதுரம்வரட் சுண்டி யின்வேர்
சரியாக வெட்டொன்றாய் வடித்துத் தேனுஞ்
சாம்பிறாணி யுங்கூட்டிச் சாதித் துண்ண
விரிவாகச் சிதறிநிற்கும் பித்த மெல்லாம்
விட்டோடு மெனமுனிவன் விளம்பி னானே 110

## இரத்தபித்தத்துக்கு
## தாமரைவளையச் சூரணம்

நாவல்விரை யாலம்விரை யரசோடத்தி
நலமுறவே பொடிசெய்து வளையங்[159] கூட்டிப்
பாவகமாய் நிலப்பனைசெங் கழுநீ ரோடு
பகருமுருங் கைப்பூவும் மானின் கொம்பும்
பூவகையாந் தூதுளம்பூ முதலாய்ப் பண்ணிப்





புகல்தேனு நெய்யுடனே பொருந்தக் கொள்ளில்
மேவியதோ ரிரத்தபித்தமி ரத்த வாந்தி
மிக்கரத்த காசமுதல் விரைந்து போமே 111

## வாயால் இரத்தமெடுத்தல்

வாயா லிரத்தந் தானெடுத்தான் மாற்றுங் கராம்பு சாதிக்காய்
ஓயா தரைக்குஞ் சீரகமு முடனே வெதுப்பிப் பிடமாக்கிக்
கூசா தரைத்தபொடியதனைக் குணமாய் வெல்லத் துடனிட்டால்
வாயா லிரத்த மெடுக்குமது மாறிப் போகு மென்றாரே 112

## மூத்திரவழியில் இரத்தபித்தத்துக்கு

போவதற்குச் சிற்றமட்டி வேரி னோடு
புகலுநீர் வள்ளியினிற் கிழங்குங் கூட்டி
மேவுமொரு நாழிநீ ருழக்காய்க் காய்ச்சி
மிக்கபசு வின்பாலு முரிதான் விட்டுத்
தாவுமதை யுழக்காய்ப் பின்னுங் காய்ச்சித்
தான்குடிக்க விவ்வண்ண மாறு நாட்கள்
பாவிவரு மிரத்த பித்த நீரி லூற்றாற்
பறக்குமென மாமுனிவர் பகர்ந்தா ரன்றே 113

## அபானத்தில் இரத்தபித்தத்துக்கு

ஒருநாழி பாலி னோடே யோருநாழி தண்ணீர் கூட்டி
இருநாழி தனையுங் காய்ச்சி யுரியாக விறக்கி யாற்றித்
திருவார்முள் ளிலவி னூற்ற பிசின்கூட்டி யிரவிற் காய்ச்சி
ஒருவாது குடிக்க மாறு முற்றிடு மபான ரத்தம் 114

## இரத்தபித்தம் மேல்நோக்கிப் பிதற்றினால்

பச்சைக்கற்ப் பூரத் தோடு பகரதி மதுரங் கோட்டம்
நச்சுசந் தனந்தேன் கண்ட சர்க்கரை பேயன் வாழை
மெச்சுறு பழமுங் குன்றி யிலைச்சாறு முயிற்று முட்டை
கச்சுறு முலையின் பாலோ ருழக்கிலிற் கலர்ந்த ரைத்தே
இச்சையிற் குடிக்க மாறு மிரத்தத்திற் பிதற்றும் பித்தம் 115

## தாமரைவளைய நெய்

செந்தாம ரைவளையஞ் சாத்தா வாரி
சிறுகொட்டி யிற்கிழங்கு தென்னம் பாளை
நந்தாத செங்கழுநீர்க் கிழங்கு[160] நெய்தல்[161]
நவில்கிழங்கு மீஞ்சினது குருகு மெல்லாம்[162]

சிந்தாம லிரண்டுகிழங்குக் கரும்பின் சாறு
தேடுமுசு முசுக்கையினிற் சாறு மின்னும்
கோந்தாருந் தாழைவிழு ததனிற் சாறுங்
குலநீற்றுப் பூசினிக்காய்ச் சாறு தானும் 116

சாற்றியபே யன் வாழைக் கனியிற் சாறுங்
தருபசுப்பா லிளநீரும் பசுவி னெய்யும்
போற்றுமிவை யொருநாழி வகைக்குக் கூட்டிப்
புகலுமதி மதுரநற்சீ ரகம்வெண் கோட்டம்
மாற்றமிர்த சர்க்கரைசந் தனமஞ் சிட்டி
வருதேவ தாருவுட ணாகம் பூவும்
நாற்றமுறு காரம்புமிவை கழஞ்ச ரைத்து
நவில் பதத்தில் வடித்துண்ண நலமுன் டாமே 117

உண்டாகு மிரத்தபித்த மிரத்த ரோக
மொழியாத சத்திவிக்கல் பிரமே கங்கள்
திண்டாடு நீர்க்கடுப்பு மேக ரோகந்
தீராத வயிற்றெரிவு புகைச்சல் காங்கை
பண்டேயுங் கால்கையி னெரிவு தானும்
பனகத்துவருங் கண்ணெரிவு கண்ணீர் பாய்தல்
வண்டாரும் விழிமடவாய் தீரு மென்று
மலையிலுறு தமிழ்முனிவன் வமுத்தினானே 118

## நாயுருவிநெய்

நாயுருவி யாறிரண்டு பலம வித்து
நாலொன்றாய் வடித்திடுநீ ரதனி னோடு
தூயபசுப் பால்நாழி நெய்யு நாழி
சொல்லுநீர் வளளியினிற்[163] சாறு நாழி
நேயமுடன் கூட்டியதிற் கரைக்குங் கற்கம்
நிகழ்முத்த மதிமதுரங் கோட்ட மேலம்
ஆயமர மஞ்சளில் வங்க மாஞ்சி
லமரர்தரு முப்பலைதிப் பிலியு மின்னும் 119

நாடுவிழா லிரிசியிவை கழஞ்சி ரண்டு
நருக்கியிடித் தேயரைத்துக் கரைத்துக் காய்ச்சிக்
கூடுமெழு சாம்பதத்தில் வடித்துக் கொண்டு
கூறியசர்க் கரைதூவிக் கொள்ள நெய்யைப்
பாடுசெயும் பலபித்த மிரத்த பித்தம்
பகர்மூலப் பித்தமுடன் கொதிப்பு மெல்லாம்
தேடுமயன் மாற்கரிய சிவநா மங்கள்
செப்புமருந் தவர்வினைபோற் றேய்ந்து மோமே 120





## மஞ்சட்பித்தம் செங்கண்மாரிக்கு

ஏலம் வங்க[164] மதிதுர மினிய பச்சைப் பயற்றினுடன்
பாலி லூற வைத்ததனைப் பரிந்தே யரைத்துப் பாக்களவு
ஏலங் குழலீர் செவ்விளநீர் மட்டைச் சாற்றிற் கொடுவல்லால்
மேலுஞ் சொன்ன சரக்குகளை விரும் பியிள நீ ருறவையே 121

ஊறு மருந்து தனையரைத்தப் பசுவின் பாலி லுட்கொள்ளில்
வீறும் மஞ்சட் பித்தமது விலகுஞ் செப்பு நெருஞ்சி யினைக்
கூறுஞ் சமூலந் துவைத்தெடுத்துப் பசுவின் பாலி லட்டதனைக்
தேறுந் தலையிற் றப்பியுட லெங்குந் தேய்த்து முழுகிடுமே 122

ஒருநாள் விட்டு முழுகிவர வோடு மஞ்சட் காமாலை
திருவே யீர வுள்ளியுடன் சேருங் கோரோ சனைதானும்
மருவார் சீர கம்நல்ல வெல்ல மரைத்துப் பசுவெண்ணெய்
உருகா ததனிற்குழைத்தருந்த வொழியுமின்ன முரைப்பக்கேள் 123

உரைக்கும் வெட்டி வேருடனே யுறுமோ ரிதழின் வனசமதும்[165]
விரைக்கும் லாமிச் சிவைமணாய் விட்டேயிளநீ ரெட்டொன்றாய்
இருக்க வடித்துக் கொடுநன்றா மியம்புங் கீழ்காய் நெல்லியினைக்
கரைத்துப் பாலிற் குடித்திடவுங் கருத்தாய் முனிவருரைத்தாரே 124

சித்தமட்டி வில்வஞ் சிறுநெருஞ்சி செம்பதுமம்
கொத்தமல்லி சுக்குக் குலவுபொரி - ஒத்திளநீர்
ஓராதே பாதிசெய் துண்பார்கட் கம்புவியில்
வாராது போஞ்செங்கண் மாரி 125

## சீதேவிநெய்

குணஞ்சேர் சீதேவி யார்[166]நெய்யைக் கூறக் கேளுந் தன்சாறும்
இணங்குங் குறுணி நாழிப்பா லிதிலா நெய்யுந்[167] தான்புகட்டி
மணங்கொள் சர்தஞ்[168] சதகுப்பை மதுரந் கோட்டஞ் செண்பகப்பூ
அணங்கே யேலங் கொத்தமல்லி யருங்கற் கண்டு சீரகமே 126

சீரா யொரோன் றைங்கழஞ்சு சேரத்தேயரைத்துக் காய்ச்சிவடித்
தேரார் சிரத்திற் பொருத்திமெய்யிலிடவேவரட்சிப்பித்தமுன்
நேரார் கண்ணி னெரிவழற்சி தேகங் காந்த லெரிப்பெல்லாம்
பாரார் திகரிப் படையெனவே[169] பயந்தெ யோடிப் பதுங்கிடுமே

## பித்தத்தில் வெப்புப்பற்றின குணம்

பித்தத்தில் வெப்புப் பற்றிற் பெருத்திடஞ் சத்திகுன்மம்
சித்தத்தை மயக்கி யேறித் தெளிவறக்[170] காய்ச்ச லாகும்
மெத்திய வீர லோடு மிகுந்துதா னெரித்த முற்றிக்
கைத்திடு நாக்குத் தானுங் கதித்திடும் பித்த வெப்பு 128

## சிகிச்சை

நெற்பொரியுஞ் சிறுபயனும் வில்வ முல்லை[171]
நேரியசீ ரேலமுடன்[172] சுக்கு நெல்லி
முற்படவே யிளநீர்விட் டெட்டொன் றாக்கி
முற்றியபின் னெடுத்துவடித் தூற்றிக் கொள்ளச்
சொற்பெரிய சத்திகுன்மஞ் சுரத்திற் சக்தி
துயரமுடன் கிறுகிறுப்பு வுழலை மூச்சுப்
புற்றறுமென் நருந்தவத்து முனிவ னந்நாட்
பகர்ந்தனனல் லருந்த மிழின் பரிசு கண்டே 129

## பஞ்சதாரைச்சூரணம்

பஞ்ச தாரை[173] யைங்கழஞ்சு பருத்த மதுர மக்கழஞ்சு
இஞ்சி திப்பிலி யிரண்டுகழஞ் சேலந் தானு மொருகழஞ்சு
அஞ்சுங் கூட்டிப் பொடிசெய்தே யாவின் பாவிற் கொள்வீரேல்
மிஞ்சிய பித்தஞ் சத்தியுடன் வெள்ளோங் காளம் நில்லாதே 130

நீடு மாதளை[174] நெற்பொரி சர்க்கரை
தேடுந் திப்பிலி தேனிற் குழைத்திடு
பீடை செய்து பிதற்றிடுஞ் சத்தியை
ஓட வோடத் துரத்துமி துண்மையே 131

## சகலபித்தத்துக்கும் பொன்னாங்காணிநெய்

பத்தர்கள் நமக்குரிய பத்மமொடு பொற்காணி
பங்கிலுறை சீதேவியும்
பரியதொரு தாழைவிழு தரியதொரு நீருடன்
பன்றிக் குறும்பனையதும்[175]
முத்தமொடு நன்னாரி மற்றிய விளாமிச்சு
மொய்குழற் கிருவேலியு
முசுக்கைகை[176] யான்றகரை முந்திரிகை பேரீஞ்சு
முற்றிய கரும்புநீரும்





சித்தமுறு நீர்வள்ளி[177] கற்கவகை சமமாய்ச்
சிறக்கவொரு பானைதனிலே
சேர்தோயம்[178] விட்டெரித் தெட்டிலொன் றாகவே
செப்பமுற வேவடித்துச்
சுத்தமுறு பசுவினெய் யிருநாழி பாலுடன்
சொல்லுமிள நீருமென்று
சொற்றவிவை தாமுமிது நாழியாய்க் கூட்டியே
சுகமுறு கடைச்சரக்கே 132

கோட்டமொடு செண்பகங் கொத்தமலி மஞ்சிட்டி
கொண்டிடுக சதகுப்பையுங்
குறையாத பச்சைகச் சோலமும் மாஞ்சிலுங்
கொளுநெல்லி முள்ளியதுவும்
தட்டறு கடுக்காயுஞ் செவ்வள்ளி சிற்றேலஞ்
சந்தனம் மதுரமோமஞ்
சார்தேவ தாரமு மிலாமிச்சை யிருவேலி
சாற்றிய கழஞ்சி ரண்டாய்
முட்டற வடித்தபின் குங்குமப் பூப்புனுகு
முறையே பொடித்துவீசி
முக்கழஞ் சொருவேளை யாகவே கொண்டுபின்
முயன்றிடுக பத்தியங்கள்
திட்டமுறு பித்தங்கள் சேற்பனம் பயித்தியந்
தீராத வுதரநோவுஞ்
சேர்ந்திடு கபாலமுறு பித்தநோ யானதுந்
தீருமிது செய்துகாணே 134

## நீற்றுப்பூசணிநெய்

நன்மைபெறு நீற்றுப்பூ சினிப் பழத்தி
னவில்சாறு நானாழி சீநதிற் றண்டின்
செம்மைபெறு சாறதுவு நாலு நாழி
சேர்தாழை விழுதினீர் சாத்தா வாரி
வெம்மையறு மிவற்றினீர் பசுவின் பாலும்
விளம்பிய செவ் விளநீரு மத்தி மூலம்[179]
தன்னினீ ரிவைவகைக்கு மூன்று நாழி
சாம்பல்வா ழைக்கிழங்கின் சாற்றி னோடே 135

மேவுமதன் பழத்திற்றேன்[180] பொன்னாங் காணி
விளம்பியசா றதினுடனே கரும்பின் சாறும்
தாவுவகைக் கருநாழி முசுமு சுக்கை
தாமரைப்பூச் சீதேவி தாடி மத்தின்

பாவுபழந் தாமரையின் வளையத் தோடு
பகர்நெல்லிக் காயிவற்றின் சாறொவ் வொன்றும்
ஓவறவே யொருநாழி நீர்ப்பூ லாவி
லுற்றவிலை யோரிதழின் வசனந் தானும் 136

தானமுறு முந்திரிகைப் பழநீர்ப் பூலாச்
சம்பீரப் பழத்தினுடனறிய தாளி
காணமரும் பழம்பாசி[181] மலையிற் றாங்கி
கருதுசிற்றா முட்டியிலை மண்ணிற் றாலம்[182]
நானமுறு மாவாரை யிவைக ளெல்லா
நவில்சாறு நாழியரை யாகக் கூட்டி
ஊனமறு பசுவினெய் நாலுநாழி
யொக்கவிட்டு வேர்வகைக ளுரைக்கக் கேளே 137

உரைமேவு நன்னாரி வில்வ முல்லை[183]
யுறுமுத்தஞ் சிறுபீளை சிறிய கீரை
இருவேலி நாயுருவி சிற்றா முட்டி
யின்பூற லசுவகந்தி யிலாமிச் சோடு
பரிவான விருதுத்தி வட்டுத் தூது
பகராடா தோடைதொய்யி லீர்ப்பூ லாவும்
திருமேவு பேரமட்டி யாம ணக்குத்
திராய்நெருஞ்சி சிறுநெருஞ்சி கீழ்காய் நெல்லி 138

நெல்லியிரு மல்லிகையு[184] மியங்கா வாரை[185]
நிலக்குமிழ்சா ரணையினுட னிவையெல் லாம்வேர்
வல்லபடி நாற்கழஞ்சு கஷாய மாக்கி
வார்நெய்யிற் கூட்டவினு மருந்து கேண்மின்
வில்வமதிற் பிஞ்சுடனே விளாத்திப் பிஞ்சு
விரும்புமா தளம்பிஞ்சு மத்திப் பிஞ்சும்
நல்லபலாக் கண்ணி[186]தென்னை யதிற்கு ரும்பை
நாடுமெள்ளுப் பருத்திவிரை யுடன்கோ தும்பை[187] 139

கோதகலும் வெள்ளரியின் விரையி னோடு
குலமூங்கி லின்னரிசி தேற்றா வித்துச்
சீதமுறு மாவரம்பூ[188] வாழை யின்பூத்
திருவுறையுங் கமலப்பூ வதனிற் றாது
தீதகலும் பூவரசின் பூவு[189] மின்னுஞ்
செப்பியநல் லிலுப்பைப்பூ மானின் கொம்பு
சாதிபெறுமுள்ளிலவின் பிசினு மெல்லாஞ்
சமனரைத்தக் கலக்கியினிக் கற்கஞ் சொல்வாம் 140





ஏயசத குப்பையுடன் மகரப் பூவு[190]
மியலாதி யதிவிடயஞ் சிவந்த வள்ளி
நேயமுறு தற்கோலந் தேவ தார
நிகழ்த்துவிழால் திப்பிலியுங் கழஞ்சி ரண்டு
காயவைத்தே யிடித்தரைத்துக் கலக்கிக் காய்ச்சிக்
கருதுபதந் தனில்வடித்துக் கண்டில் வெண்ணெய்
தூயபசுங் கர்ப்பூரம் புனுகு சட்டஞ்
சொற்புனுகு ரோசினையுங் குங்கு மப்பூ 141

பூவுடனே கஸ்தூரி கழஞ்சு வீதம்
பொடிசெய்து தூவியபின் குந்து ருக்கம்[191]
தாவுதிரி கடுகுதேன் கற்கண் டோடு
தகுசீனி மேற்பொடியு மிட்டுக் கொண்டு
மேவுகரி முகவனுக்கு வழிபா டாற்றி
விரும்பியொரு கழஞ்சுகொள்ள விலகு நோய்கள்
பாவுபல பித்தங்க ளுடம்பெ ரிப்புப்
பகரிருமல் வரட்பித்த மிரத்த பித்தம் 142

பித்தத்தி லுறுஞ்சோகை பாண்டு குன்மம்
பிரமியநீ ரழிவுகிரிச் சிரமே யீழை
மத்தமுறு மருத்தீடு கல்ல டைப்பு
வருமிரத்த காசமுடன் சதைய டைப்புச்[192]
சத்திபித்தம் விக்கல்மந் தார காசந்
தாகமதி தாபமெரி குன்ம மாதி
மெத்தவெலும் பினையுருக்கி சுவாத காசம்[193]
மிகுந்திருக்கு முட்காய்ச்சல் விரைந்து போமே 143

## சீந்தில்நெய்

சீந்தில்சிற் றாமணக்குச் சிறுநெருஞ்சி
செப்புமுத்த நன்னாரி பன்றிக் கோவை[194]
ஏய்ந்திடுநீர் வள்ளிதிராய்[195] பேய்த்தி மிட்டி[196]
யிருமுட்டி யசுவகந்தி கண்டங் காலி
வாய்ந்தபங்கம் பாளைவில்வம் பொன்னாங் காணி
வழுதலைவே ருடன்கொட்டிக் கிழங்கு தானும்
ஆய்ந்தவிவை யைந்துபலம் வகைக்குக் கூட்டி
யதையிடித்தே யொருதூணி தண்ணீர் வாரே 144

வார்த்தைஞ்சு நாளடுப்பி லெட்டொன் றாக்கி
வடித்ததிலே நெல்லிக்கா யதனிற் சாறும்
சேர்த்திடுபூ சினிக்காயிற் சாறும் பாலுந்

திகழ்நெய்யு மொவ்வொர்படி சேரக் கூட்டிப்
பார்த்திலுப்பைப் பூக்கோட்டந் தேவ தாரம்
பகர்சாள மஞ்சிட்டி மதுர மிந்துப்
பேற்றமிகு சடாமாஞ்சில் செண்பகப்பூ
விருவேலி யிலாமிச்சு நாகம் பூவே 145

பூவாருஞ் செங்கழுநீர்க் கிழங்கு சுக்குப்
புகல்வனச வளையமுட னத்தித் திப்பில்[198]
தேவாருஞ் சந்தனந்திப் பிலிக டுக்காய்
செவ்வியம்வெட் பாலையினி லரிசி தானும்
நாவாரு முந்திரிகை பேரீஞ் சோடு
நன்மிளகு நெல்லிக்காய் தான்றி யின்காய்
கோவாரும் விளாங்கனிசா ரணையின் வேருங்
கூறுதுவர்ச் சிகை[199]கறியின் பாலை[200] யோடே 146

கூறுசவர்க் காரமிவை கழஞ்சு வீதங்
கூட்டியிடித் தேயரைத்துப் பசுவின் பாலால்
தேறுநெய்யிற் கரைத்துமெழு காம்ப தத்திற்
சிறக்கவடித் திளஞ்சூட்டிற் குங்கு மப்பூ
வீறுபசு ரோசனையும் பொடித்தத் தூவி
விளங்கவிரு கழஞ்சுகொள்ள வரட்சி பித்தம்
ஊறுசெயுங் கசரோகங்க கண்ணி ருட்சி
யுட்டணத்திற் காந்தியுட லெரிவு மேகம் 147

மேகமுடன் பிரமேகங் கண்ணெ ரிப்பு
மிகுமுதரந் தனிலெரிவு மயக்கம் கோழை
தாகமுடன் மேல்மூச்சுக் கைகால் காந்தல்
தணியாத பித்தத்தி லெடுத்த நோய்கள்
சோகமறுந் துவாலையிட வதுவு நன்றாம்
துயரொழியுஞ் சுகமுண்டா மிந்த வண்ணம்
பாகமதி லுமையவளை வைத்த வீசன்
பதமறவாத தமிழ்முனிவன் பகர்ந்த வாறே 148

## கற்கம்

பித்தமேறித் தலையே சுழற்றிடிற் பிரியமாமிருவேலியிலாமிச்சுச்
சித்த மெய்திடு சந்தனஞ்செண்பகஞ்சீ துளாயும[201]திமதுரத்துடன்
நித்தம்பாலிலரைத்துக்கொடுத்துளே நேருமாலை[202] தலையினிற்றேய்
சத்தி கெடடுப் பெலன்கெட்டுப் பித்தமுந் தானொழிந்திடு (த்திடு
(மென் றனர் காணுமே 149





## பித்தாரிச்சூரணம்

திரிகடுகு வெண்சந்த நாகம்பூத் தக்கோலஞ் சிறுமஞ் சிட்டி
தெரிமதுரங் கச்சோலந் தகரஞ்சேர் சாதிக்கா கோட்டஞ் சீரம்[203]
கருதரிய வஞ்சனக்கல் கெந்தகம்வெந் தயம்புனுகு கடுகு ரோண
இருவேலி நன்னாரி யிலாமிச்சு முத்தக்கா சேல மாஞ்சில் 150

செங்கழுநீர்க்கிழங்குபசுங்கர்ப்பூரஞ்சரக்கெல்லாங்கழஞ்சி ரண்ட
நங்குபசுப் பால்நாழி செவ்விளநீரிருநாழியொலியக்கூட்டி(ய்ப
அங்கதிலேயூறிவெயின் முகத்துலர்த்திசூரணித்தேயதனையுண்ணத்
தங்குபலபித்தங்களெரிபித்தஞ்சு மூற்றுபித்தந் தவிர்ந்து போமே 151

## மகிழம்பூச்சந்தனாதியெண்ணெய்

சந்தன மேல மிலவங்கந் தகுமிரு வேலி யிலாமிச்சு
முந்திய முத்த நன்னாரி முதிர்ந்த வனச வளையமதும்
தந்திடு நெல்லி மகிழம்பூத் தவறா தொன்று பலமாறு
சிந்திடு நீர் ணாலொன்றாய்ச் சிறக்க வடித்துக் கொண்டதிலே 152

அதிலே யெள்ளி லெண்ணெயுட னாவின் பாலு முந்நாழி
விதியே யழவி யிருவேலி கண்டில் வெண்ணெய் நாகம்பூக்
கதிசேர் சந்தம் பச்சிலைகச் சோலங் கோட்டஞ் செவ்வள்ளி
மதிசே ரடவி[204] கச்சோல மணக்கு மகில்செஞ் சந்தனமே 153

மேவுங் கடகு ரோகணியும் விரைதக் கோல மதாவரிசி[205]
தூவு நிறஞ்சேர் மஞ்சிட்டி சொலுஞ்செவ் வள்ளி குங்குமப்பூப்
பாவும் வகைக்கு முக்கழஞ்சு பரிந்தே யிடித்த பொடி தூவித்
தாவு மெழுகு பதம் வடித்துத் தனிலே பளிதம் புனுகுடனே 154

கூட்டித் தலையில் வார்த்திடவே கூறும்பித்தக் கிறுகிறுப்பு
நாட்டந் தன்னி லெரிவழற்சி நவிலு மங்கங் காந்தலுடன்
வாட்டு முதரத் தினிலெரிவு மயக்கஞ் சோகந் தலைச்சுழற்சி
மூட்டு மிவைகண் மாறுமெனமுன்னோர்மொழிந்தமொழியதுவே 155

## புளியெண்ணெய்

சிற்றமட்டி நன்னாரி சீதேவி செங்கழுநீ ரசுவ கந்தி
முத்தமிரு வேலியிலாமிச்சுவட்டுத் தூதுவளைமொழிபொற்காணி
நொச்சிசிறு காஞ்சோன்றி சுளப்பன்னை[206] கன்முரிசு[207] நுவலி யங்கு[208]
முற்றுகொடி மல்லிகை[209]செங் கத்தாரி யுடன்கிரந்தி நாயன்றானும் 156

வேர்வகைக ளொவ்வொர்பிடியேலமிலவங்கமதிமதுரங்கோட்டம்
சீர்மைபெறு மஞ்சிட்டி சதகுப்பை சிற்றரத்தை செண்ப கப்பூக்

கூர்மைபெறு மிளகிருசீ ரகமஞ்சள் வசுவாசி கொம்பு திப்பில்
நீர்மைபெறு மாசிக்காய் சாதிக்காய் செஞ்சந்து நெல்லி யின்காய் 157

காயுடனேகராம்புநறம்பிசினிவைக ளொருகழஞ்சுவகைக்குக்கூட்டி
நேயமுடனிடிபொடித்துவேர்வகைகளெட்டொன்றாய்வடித்தநீ ரும்
ஆயபசுப் பால்நாழி யெள்ளெண்ணெ யொருநாழியமையவிட்டுச்
சேயவெலு மிச்சையினிற் புளியுநா ணாழியதிற் சேர்த்தி டாயே 158

சேர்த்துவடித்தெடுத்திட்டதயிலதைச்சிரமதனிற்றேய்த்துமூழ்க
ஆர்த்துவரு ம்பித்தத்திற்கிறுதிசோகையரும்பாண்டுதலைச்சுழற்சி
கூர்த்துவருங் கபாலவலி கண்ணழற்சி மத லாகக்கூறும்நோயகள்
தீர்த்துவிடமெனமுனிவன் செப்பியநன் முறையநிற்துதெளிந்திடாயே 159

## சிற்றமட்டியெண்ணெய்

சிற்றமட்டி முசுமுசுக்கை சாத்தா வாரி
சீதேவி நாரியிரு வேலி வாமிச்
சுற்றநெல்லி கைத்தகரை வேளை[210] சீந்தி
லுறுவனச வளையமுமோ ரிதழின் கஞ்சம்[211]
பெற்றிடுபொன் னாங்காணி வரிக்கற் றாழை[212]
பேசமுத்த முப்பலமாய் வகைக்கி டித்து
வற்றவெரி பதக்குநீ ரெட்டொன் றாக்கி
வடித்தெண்ணெய் பசுவின்பா லிளநீ ராமே 160

நீருமிவை நானாழி கோட்ட மேல
நிகழ்மதுரம் வசுவாசி செண்ப கப்பூச்
சாருமிரு சந்தனமஞ் சிட்டி மாஞ்சில்
தருகணித வேதியில வங்க மோடு
பாருறுசெவ் வள்ளிகராம் பிவைவ கைக்குப்
பகருந்நாற் கழஞ்சுபொடி வடித்தக் கொண்டு
சீரியநற் புழுகுடனே பளிதங் கூட்டித்[213]
தேய்த்துமுழு கிடப்பித்தந் தீர்ந்து போமே 161

## குமரியெண்ணெய்

கற்றாழை கையான் குறுந்தொட்டி சீதேவி
கமழாம்[214]பல் சீந்தில்கஞ்சங்
கருதுசெங் கழுநீருடன் கொட்டி பொற்காணி
கழறுமிவை சாறுநாழி
உற்றாவி னுறுபயம் மெள்ளெண்ணை யிளநீரு
மோரொன் றிரண்டுநாழி
யுறுமேல மதிமதுர மோடுகடு ரோகணியு





முயர்கணித வேதியதுவும்
நற்சாதி யின்காய் சடாமாஞ்சில் மஞ்சிட்டி
நாகமலர் குந்துருக்கந்
நறும்பிசின் செஞ்சந்தம் வசுவாசி கல்நார்
நவிலுமிரு வேலிமுத்தம்
சொற்பாவு செவ்வள்ளி லாமிச்சு நன்னாரி
சூழுமிவை நாற்கழஞ்சு
சுகமுதவு பதமதனி லேவடித் திடுமுழுகு
சுழல்பித்த மிவைதீருமே 162

## இளநீரெண்ணெய்

உரைக்கு மிளநீர் சீதேவி யுற்ற சாறு நீர்வள்ளி (யாய்
நுரைக்குஞ் சாறு மெள்ளெண்ணெய் நுவலவோரொன்றொருபடி
விரைக்குஞ் சந்த மிருவேலி[215] மதுர மிலாமிச் சுடன்பளிதம்[216]
கரைக்குஞ்செஞ்சந்தனமரைத்துக்காய்ச்சி மழுகப் பித்தம்போம்

## முக்கூட்டுப்புளியெண்ணெய்

எள்ளெண்ணெய் பசுவினெய் யேரண் டெண்ணெ
யெலுமிச்சம் புளிபசுப்பா லிளநீர் நெல்லி
உள்ளநற்காய் நீர்வள்ளி யீர வுள்ளி
யுறுமிவற்றின் சாறுமிவை வகைக்கு நாழி
எள்ளலறு மிருவேலி யிலாமிச் சோம
மேலமில வங்கமொடு சாதிக் காயும்
வெள்ளையுறு சந்தனநற் கராம்பு தானும்
வெண்பிசினு மிவைவகைக்குக் கழஞ்சொவ்வொன்றே 164

ஒன்றியநல் லதிமதுர மிளகி னோடே
யுற்றகடுக் காயுமிவை யைங்க ழஞ்சு
துன்றியநற் சீரகமோர் சிறங்கை பின்னுந்
தொகுமுத்த நாயுருவி பொன்னாங் காணி
நன்றிதரு சிற்றமட்டி பேர மட்டி
நாடியசெங் கத்தாரி யிவையெல் லாம்வேர்
ஒன்றோரர்பிடி தூளாக்கிக் கலந்து காய்ச்சி
யுறும்பதத்தில் வடிமுழுகப் பித்தம் போக்கும் 165

## சிறுகீரைத்தைலம்

சிறுகீரைச்சாறு, திராய்ச்சாறு, பசுப்பால், இளநீர், எள்ளெண்ணெய் வகைக்குப் படி-க. சிறுகீரைவேர், ஓரிதழ்வேர், இருவெலி, இலாமிச்சு, பொன்னாங்காணி, கோரைக் கிழங்கு, பெருமருந்து வேர், வகை பலம்-க-இடித்தவித்து எட்டொன்றாக்கிய கஷாயம் இவற்றை யொன்றாகக் கலந்து அதில் சீதேவியார் செங்கழுநீர்வேர், நன்னாரிவேர்: சிற்றமட்டிவேர், சிறுகீரைவேர், நெல்லிக்காய், தான்றிக்காய், சந்தனம், அதிமதுரம், கோட்டம், ஏலம், அகில், தேவதாரு. இலவங்கப்படடை, பத்திரி, திப்பிலி, திப்பிலிமூலம் மஞ்சிட்டி, செவ்வள்ளி, நாகம்பூ, செண்பகப்பூ, செங்கழுநீர்கிழங்கு, மிளகு, சுக்கு, பெருங்குரும்பை, கராம்பு, சாதிக்காய், உலுவா, கச்சோலம், செவியம், சிற்றாத்தை. சிறு மூலம் வகை கழஞ்சு-க. அரைத்துக் கரைத்துப் பதத்தில் வடித்து, கோரோசனை, குங்குமப்பூ, புழுகுசட்டம், பச்சைக்கர்ப்பூரம், வகை கழஞ்சு-இ. மேற்பொடி தூவித் தலையிற்பொருத்தி பச்சைப்பயறு, நெல்லிக்காய் தேய்த்து முழுக பித்தகிறுதி நடுக்கம், தலைச்சுழற்சி, தலைவலி கண்புகைச்சல் பித்தக்கொதி பித்தகாசம் தீரும்.

## புளியெண்ணெய்

எலுமிச்சம்புளி படி-ச. நாரத்தங்காய்ப்புளி படி-உ. நெல்லிகாய்ச் சாறு, படி.உ. தாமரைவளையச்சாறு, பொன்னாங்காணிச்சாறு, சாத்தா வாரிக்கிழங்குச்சாறு, ஓரிதழ்த்தாமரைச்சாறு, கீழ்க்காய்நெல்லிச்சாறு, சிறு கீரைச்சாறு, பச்சைப்பயறவித்தகஷாயம், பசுப்பால், இளநீர், நல்லெண் ணெய்-வகை படி-க. இருவேலி, இலாமிச்சு, முத்தக்காசு, அமுக்கிரா, வில்வம்வேர், சிற்றமட்டி, சீதேவியார்வேர் வகை பலம்-க. இடித்தவித்த கஷாயம் விட்டு பச்சிலை, கச்சோலம், கற்கம், நெல்லி, மதுரம், சந்த னம், அகில் தேவதாரு, ஏலம், இலவங்கம், இலவங்கபத்திரி, திப்பிலி, திப்பிலிமூலம், கோட்டம், மஞ்சிட்டி, செவ்வள்ளி, சிறுநாகம்பூ, சிற்றரத்தை, செண்பகப்பூ, சாதிக்காய், கராம்பு, வசுவாசி, செவ்வியம், சிறுமூலம், பெருங்குரும்பை வகை கழஞ்சு-க அரைத்துக் கலக்கி மெழுகுபதம் வடித்து புழுகுசட்டம், கர்ப்பூரம் மேற்பொடிதூவி முன்போல முழுகிவர பித்தம், பித்தகாசம், பிதற்றல், ஓடித்திரிதல், நடக்கம், சுழற்சி பயம், நித்திரைப் பங்கம் முதலியன தீரும்.

## வில்வப்பாணி

வில்வமரத்தின் வேருடனே விரும்பு மதன்பூப் பழம்பிஞ்சு
சொல்லும் பத்திரி காய தூவுஞ் சுகமாந்நெல்லிய தின்வேரும்
நல்ல கறிமுல் லையின்வேரு நயமாய்ப் பலமொன் றவைகூட்டி
நெல்லிக் காயினுடன்பச்சைப் பயறு நெல்லிக் பொரிதானும் 166





தானே வகைக்கோர் படிகூட்டித் தருசெவ் விளநீர் விட்டவித்துத்
தேனே போல நாலுமுறை யிடித்தப் பிழிந்து சீரகத்தூள்
மானே பலமொன் றதிற்கரைத்து மன்னு மெலுமிச் சையிற்புளி
தானே படியொன் றதுவிட்டுத் தருதேனதுவுமரைப்படியே(யும் 167

படியே கூட்டிக் காய்ச்சியது பாணிப் பதமாயிறக்கிமுறைப்
படியே தின்று வரப்பித்தம் பலவுஞ் சத்தி யருவருப்பும்
கொடிசே ரிடையாய் கிறுகிறுப்புங் கூறுஞ் சுழற்சி நடுக்கமதும்
துடியே நெஞ்சிற் படபடப்புந் தொலைந்து போகுந்துணிபாமே

## வயிற்றெரிவுபித்தத்திற்கு அமுதவல்லிப்பானம்

தாய்மொழியே யமுதவல்லித் தண்ட தன்னைத்
தோல்போக்கிக் குறுகவெட்டி நசியத் தட்டித்
தீமருவ வறுத்ததிலே யிளநீ ருற்றித்
தேன்வெண்ணெய் தமைப்போட்டுத் தெளிய வாங்கி
வாய்மருவ விருகரத்தா லெடுக்கும் போது
வாரணமா முகத்தானை வணங்கி யேத்தி
நோய்மருவு வார்பருகில் வயிற்றெ ரிப்பு
நுண்ணிடையாய் மாறுமென்றார் நுல்வல் லோரே 168

## எலுமிச்சம் பழப் பானம்

வல்லிநல்லா யெலுமிச்சம் பழத்திற் சாறு
வடித்தூரியோ டதிமதுரங் கழஞ்சு கூட்டிச்
சொல்லியதோர் புதுச்சட்டி தனிலே வார்த்துத்
தூயபனி தன்னிலே தூக்கி வைத்தே
எல்லையிலா மார்த்தாண்ட னுதிக்கு முன்னே
யிணங்கியசீ னியுங்கூட்டி யருந்துவீரேல்
புல்லியபித் தங்களெலாஞ் சுத்தமாகப்
போகவழி தெடுமெனப் புகன்றா ரன்றோ 169

## சுரசம்

புகன் றகைதை[217] விழுதுடன்பூ சினிக்காய்ச் சாறு
பொருந்தவிவை யொன்றுழக்குப் போதக் கூட்டி
நவின்றலகை யெனும்வாழைப் பழமி ரண்டு
நல்லபொன்னாங் காணியில்வேர் மதுர மேலம்
துவன்றசந்தஞ் செண்பகப்பூக் கழஞ்சோ ரொன்று
துன்னியரைத் ததிற்கலக்கிச் சோர்வு றாமல்
அவன்றலையில் வார்த்துடலிற் பூசி யுள்ளு
மருந்துபித்த மதிக முறநகன்றுபோமே 170

## மருட்பித்தம் முதலியவற்றிற்கு பூசனிநெய்

போமருட்பித் தந்தனக்குக் கோட்டங் குப்பை
பொருநதியநற் சீரகஞ்சென் பகப்பூ வேலம்
நாமவுரு மதிமதுரங் கொத்த மல்லி
நல்கியசாத் திரபேதி யுடன்செவ் வள்ளி
தேமருவு மிருவேலி யிலவங் கந்தான்
றிருத்தியசா திக்காயுங் கழஞ்சோ றொன்று
பூமருவு மோரிதழ்த்தா மரைநீர்ப் பூலாப்
பொருந்தியபேர் மட்டிசிற மட்டி தானும் 171

தானேசீ தேவியுடன் பொன்னாங் காணி
தாமரையின் வளையமுங்காற் பாசக் காயும்[218]
தேனேநன் னாரிவேர்வல் லாரல் முத்தஞ்
செவ்வாம்பற் கிழங்குடனே சீந்திற்றண்டு
கானேறு முசுமுசுக்கை சாத்தா வாரி
கருதியதா மரைக்கிழங்கு கதலிக் கந்தம்[219]
கோனேயா வாரைசிறு கீரை யின்வேர்
கொள்கவெழுத் தாணியின்வே ரிலைபுங் கூட்டே 172

கூட்டுமொன்றோ திருகழஞ்சா யிளநீர் தானுங்
கூஸ்மாண்டப் பழச்சாறுங் குறைவில் லாமல்
ஈட்டியபின் னிரண்டாகப் பகுந்தோர் பங்கி
லினியநறு நெய்வாழைப் பழநற் சீனி
போட்டருந்தி யிருந்த பங்கி லிளநீ ரிக்குப்
பூசினிக்காய்ச் சாறதுமொன் றிரணிடு நாழி
வாட்டமினெய் நானாழி விட்டங் கூறி
வடித்துடலந் தனிற்பூசித் தலைமேல் வாரே 173

## சுரசம்

வார்த்துவரின் மருட்பித்த மாறு மின்னு
மதுரமுசு முசுக்கையுடன் வாகைச் சாறு
சேர்த்துக்க முதைப்பாவீற் குடிப்பீ ராகிற்
றீராத மருட்பித்தமெல்லாந் தீரும்
ஏர்த்தகடற் கரையிற்பூ நாகங் கூட்டி[220]
யிருக்கின்ற முயிற்றுமுட்டை யிவையோ றொன்று
கூர்த்தமுரு கம்பழத்தி னளவு சந்தங்
கூறுமுர்த்திராக்க முரைத் திடுபாக் களவே 174





## முசுமுசுக்கைநெய்

அளவரைத்து வள்முலைப்பா லூரியுங் கூட்டி
யுருந்துவிரேற் பித்தசன்னி யகலு மின்னும்
வளருமுசு முசுக்கையது குறுணிச் சாறு
மணங்கமழ்சீ தேவியிற்சா றிரண்டு நாழி
கிளை மிகுத்த தாழைவிழு துடனீர் வள்ளிக்
கிழங்குபொன்னாங் காணிநெய்வெள் ளரிக்காய்ச் சாறும்
அளவுசொற்றா றொருநாலு நாழி பாலு
மவ்வளவு கிருதமுமப் படியே கூட்டே 175

கூட்டியிதிற் கரைக்குமருந் திலவங் கந்தான்
குப்பையதி மதுரமகில் கூகை நீறு
ஈடியசாத் திரபேதி கராம்பு கல்நா
ரேலமா மஞ்சள் வெட்பால் விழால்மஞ் சிட்டி
காட்டிலுள சந்தனங்குங் குமஞ்செவ் வள்ளி
கலங்கொம்பு புழுகுசட் டங் கொத்த மல்லி
நாட்டியகோ ரோசனைசெவ் வியம ரத்தை
நாகம்பூத் தனித்தனியோர் நாற்க ழஞ்சே 176

நாற்கழஞ் சரைத்துக் கூட்டி நலம்பெற வடித்த நெய்யைச்
சேர்க்கவுஞ் சிரத்தி லுள்ளே தின்னவு முடம்பி லும்பூ
சேற்கவே வரட்சி யித்த மிவையெலா முடலை விட்டுப்
பாற்கண் றன்னைக் கண்ட பனியெனப் பறந்து போமே

பித்தரோக நிதானம் முற்றிற்று.

# பின்னிணைப்புக்கள் விளக்கக் குறிப்புக்கள்

| | | |
|---|---|---|
| 01. | நையவே | கடுமையாக |
| 02. | கசப்பு | கைப்பு – (அதியோகத்தால்) |
| 03. | விளைக்கு | உண்டாக்கும் |
| 04. | மற்றுள வேது | மற்றய காரணங்கள் |
| 05. | வர்த்திக்கும் | பித்ததோசம் கூடும் |
| 06. | வெதுப்புண்டாகும் | வெப்பமுண்டாகும் |
| 07. | சித்தமது பேதமாய் | மனக் குளப்பமாய் |
| 08. | புளிதாகிக்கும் | புளிப்பை விரும்பும் |
| 09. | நிஉறப்படனே | மஞ்சள் நிறமாக |
| 10. | நடுக்கியேறும் | பதட்டத்துடன் வேகமாகும் |
| 11. | மசனம் | உணவு |
| 12. | மேதமாய்க்கடுக்கும் | காரணமாக |
| 13. | மருவிடும் | இயற்கயான பசி |
| 14. | மலக்கிடு | திகைப்பான |
| 15. | நோங் | நோவு |
| 16. | அத்தியாய் | எலும்பையும் தாக்கக்கூடிய வெப்பு |
| 17. | வசங்கெட | தயிரியமில்லாமல் |
| 18. | செயிர்த்திடு | அசதி |
| 19. | அயிர்த்திடு | தளர்ந்திடும் |
| 20. | மறஞ்செயும் | கொடுமை செய்யும் |
| 21. | மூதைவிம்மும் | வாய்வுவினால் வீங்கும் |
| 22. | மறக்கழியும் | தாது குறையும் |
| 23. | புதைவாகுங் | விரலால் ஊண்ட புதையும் |
| 24. | யூதையுண்டாகி | வாயுவுண்டாகி |
| 25. | துயங்கிடு | சலனப்படும் |
| 26. | ஐயமிகவும் | சந்தேகமாக |
| 27. | துப்புதன் மீள் | துப்புதல் + மீன் |
| 28. | கடிதடம் | குறி |
| 29. | தாகபர தாபமாகும் | பரிதாபமாகும் |
| 30. | பொங்கிடு நீர் | சிறுநீர் |
| 31. | பொருமிடுஞ் | உடல் கனத்து |
| 32. | போதநெஞ்சு | நெஞ்சு முழுதும் |
| 33. | கயலை | மீனையும் |
| 34. | வாளைச் | கூரான |
| | வடுப்பிள | வளைவான |
| 35. | கன்னலைக் | கரும்பு |
| 36. | கண்டினைக் | கற்கண்டு |
| 37. | கறுக்குஞ் | இனிமையான |
| 38. | அனத்தினை | ----------------- |
| 39. | சதித்திடு | கேடுபயக்கக்கூடிய |
| 40. | சிறு மூலம் | திப்பலி மூலம் |
| 41. | கடுகோட்டஞ் | கடுக்காய் + கோட்டம் |
| 42. | தாரம் | தேவதாரம் |
| 43. | கண்டில்வெண்ணெய் | கண்டில்வெண்ணைக்கு பதில் வெண் குங்கிலியம் சேர்ப்பர் |
| 44. | வேதி | கணிதபேதி |
| 45. | அரிசிவகையாறு | ஏலரிசி வாலுழுவையரிசி விளால் அரிசி, கார்புகாவரிசி, உறுளரிசி |
| 46. | பூர | பச்சைக் கற்பூரம் |
| 47. | புடோவின்கா | புடோல் காய் |
| 48. | முப்பலை | திரிபலை |
| 49. | நாகண | சங்கின் வாசலில் உள்ள மூடி |
| 50. | மாமதுர | அதிமதுரம் |
| 51. | தார | தேவதாரம் (அரிதாரம் இதில் பொருந்தாது) |
| 52. | தூப | சாம்பிராணி |
| 53. | சந்தமுறு | வெண்சந்தணம் |
| 54. | பத்திரிகள் மூன்று | இலவங்கபத்திரி, தாளிசபத்திரி, சாதிபத்திரி |
| 55. | வெறி களைந்து | சாதிக்காய் , சாதிபத்திரி இலவங்கம், இலவங்கம் பட்டை ஏலம் |
| 56. | வாசமனவதானுமைந்து | பச்சைக் கற்பூரம்,தக்கோளம், இலவங்கம், சாதிக்காய், சாதிப்பூ |
| 57. | பரதாப நெஞ்சுலர்வு | கூடிய அளர்ச்சி |
| 58. | விற்புருதி | கட்டி |
| 59. | விசிவுமே | சம்தானாகபோதல் |
| 60. | யூடெழு | 7 சுரங்கள் (7 தாதுவைப் பற்றிய கத சுரம்) |
| 61. | கை மலக்கினோ | மருத்தீடு |
| 62. | இருவேலி | வெட்டிவேர் |
| 63. | மலாக்கா யோகம் | மலாக்காய் சந்தனம் + ஓமம் |

| | | |
|---|---|---|
| 64. | வாய்விளங்கம் | வாய்விடங்க விதை |
| 65. | ஆறரிசி | ஏலரிசி, வாலுழுவையரிசி விளாலரிசி, கார்புகாவரிசி வெட்பாலரிசி, உருறாரிசி, உலுவா |
| 66. | சிறுமூலம் | திப்பலிமூலம் |
| 67. | நறுவியொடு | நறுவிலிப்பட்டை |
| 68. | வாசம் ஐந்து | பச்சைக்கற்பூரம், தக்கோலம், இலவங்கம், சாதிக்காய், சாதிப்பூ |
| 69. | மூலம் ஐந்து | பெருமருந்து, சிறுகுறிஞ்சா, பேரரத்தை, சிறுதேக்கு, சுக்கு |
| 70. | லகிரி ஐந்து | சாதிக்காய், சாதிபத்திரி, இலவங்கம், இலவங்கப்பட்டை, ஏலம் |
| 71. | பஞ்சவன் பழுக்காய் | பாக்கு |
| 72. | புளியம் விதைத்தோடு | புளியம் விதை ஓடு |
| 73. | சத்த வர்க்கம் | ---------- |
| 74. | சாரீந்து | பேரீந்து |
| 75. | கதலிப்பூ | கதலிபிஞ்சுப்பூ |
| 76. | பூஞ்சாந்து | குங்மப்பட்டை |
| 77. | குனரப்பிருமால் | குக்கல் |
| 78. | யாகங் காந்தல் | தேகங் கூந்தல் |
| 79. | தொண்டைக் கட்டு | குரல் கட்டுதல் |
| 80. | வெள்ளை இற்றுவிழ | வெள்ளை சாய்தல் |
| 81. | சீதை | பொன்னாங்காணி |
| 82. | உரி | பட்டை |
| 83. | பற்பமல ரல்லி | தாமரைப்பூ அல்லி |
| 84. | நானல் | குங்குமப் பூ |
| 85. | நந்தி நாரி | நந்தியாவட்டை, நன்னாரி |
| 86. | பொரு நெல் வேர் | பெரு நெல்லி வேர் |
| 87. | கன்னலூறு | (கரும்பு) மாவுள்ள சீந்தில் |
| 88. | கதலிக்காய் | கதலிக் காய் |
| 89. | முன்னை | கறிமுல்லை |
| 90. | தூது மின்னியிலை | தூதுவளையிலை |
| 91. | நெல்லிமுளி | நெல்லி காய் வற்றல் |
| 92. | மிச்சு | லாமிச்சு |
| 93. | நறுங்கோவை | கொவ்வை (காய்) |
| 94. | சின்னி | சிறுசின்னி |
| 95. | கூடவிளை | வில்வை |
| 96. | குலவேம்பு | சாதிக்காய் + வேம்புபட்டை |





| | | |
|---|---|---|
| 97. | பாகல்மரம் நாலுரிய பட்டை | அத்தி, இத்தி, ஆல், அரசு இவற்றின் பட்டை |
| 98. | விராவி | விராலி மரப்பட்டை |
| 99. | சினை மலர் | குங்குமப் பூ |
| 100. | சீவகவகைகள் | காகோலி சீரகாகோலி சீவகம் இடவகம், மேதை, மகாமேதை இலுப்பைப்பூ கோரைக் கிழங்கு திருநாமப்பாலை |
| 101. | மிட்டேலமும் | ஏலம் |
| 102. | கறுவிளா | விளாத்தி |
| 103. | பூ மருவுலாத் தருவு | கஸ்தூரி |
| 104. | நீள் மதுர மா மதமுமே | |
| 105. | சயிந்தமும் | இந்துப்பு |
| 106. | மட்டி | சித்தமட்டி |
| 107. | நாகண | சங்குக்கதவு |
| 108. | கருமாமலர் | செங்கழுநீர் அல்லது கராம்பு |
| 109. | மட்டுலாவுறு குப்பை | பெரும் சதகுப்பை |
| 110. | நறும்பிசின் | கஸ்தூரி மஞ்சள் (வாசனையுடைய மஞ்சள்) |
| 111. | செருந்தமும் | மணித்தக்காளி |
| 112. | அக்கி நீர் சிவசந்து விளம்பிசின் | செஞ்சந்தணம் + விளம்பிசின் |
| 113. | விளமூலம் | திப்பலி மூலம் |
| 114. | துளங்கனியின்புனல் | தூதுவளம் பழச் சாறு |
| 115. | கமழ் சீதநீர் | இளநீர் |
| 116. | செம் பிளிச்சங் கொட்டை | செம் புளிஞ்சிக் கொட்டை |
| 117. | கமல மூலம் | தாமரை கிழங்கு |
| 118. | நறுநெய்தன் மூலமுடன் | நெய்தல் கிழங்கு |
| 119. | விளங்கனியி னோடே | விளாங்கனியினோடு |
| 120. | கர்ப்பூரம் | பச்சைக் கற்பூரம் |
| 121. | கன்மதம் | கல்மதம் |
| 122. | தான் பத்திரி | தாளிச பத்திரி |
| 123. | சல மேகம் | சலம் அடிக்கடி போகும் மேகம் |
| 124. | கையானீர் | கையாந்தகரை இலைச்சாறு |
| 125. | காணச்சாறு | கொள்ளுக் கசாயம் |
| 126. | உப்பைந்து | இந்துப்பு, வெடியுப்பு, கல்லுப்பு, வளையலுப்பு, அட்டுப்பு |

| | | |
|---|---|---|
| 127. | காரமைந்து | வெண்காரம், பொரிகாரம், சவுக்காரம், சீனக் காரம், அப்பளாக்காரம் |
| 128. | சாரமைந்து | நவச்சாரம், ஏவாச்சரம், சிவச்சாரம், சத்திச் சாரம், தும்பச்சாரம் |
| 129. | செப்பு, விளங்கஞ் | செப்பு நெரிஞ்சி, வாய்விளங்கம் |
| 130. | தருவோடு | தேவதாரு |
| 131. | சோமன், மஞ்சள் | பெருங்காயம், குறிமஞ்சள் |
| 132. | விண்ட சிறு கடுகும் | சொல்லிய சிறுகடுகும் |
| 133. | பூதவர்க்கம் | பீநாறி |
| 134. | குந்திருக்கம் | வெண்குங்கிலியம் |
| 135. | முத்து, மவுரி | முத்தக்காசு, அவுரி |
| 136. | முட்காவிளை வேர் | காவிளை வேர் |
| 137. | நசங் கொள்ளு | கொள்ளு |
| 138. | மதுவினில் | தேனில் |
| 139. | யாம சூலைகள் | ஆம சூலைகள் |
| 140. | ஊதை மோதிரு | உடலை பற்றி |
| 141. | வேக கோபினை | வில்வம் |
| 142. | தாது சீவித சூலை சூரைகள் | தாதுவைப்பற்றிய கட்டிகள் |
| 143. | சோரிகள் | இரத்த சொரிவு |
| 144. | சோகை மேவிடு மூதை மேவிடல் | பித்தம் மேலிட்டதாலேற்பட்ட வீக்கம் |
| 145. | வன்மையுறு மாமை | வன்மையான ஆமதோசம் |
| 145. | கொன்னுறு கவிசை | அண்டத்தின வாயு |
| 146. | பின்னாமுறு சூரை | பித்த சூலை |
| 147. | கர்த்தபத்தின் | கழுதையின் |
| 148. | நானமுறை | படிமுறையாக |
| 150. | கைமயக்கும் | மயக்கம் |
| 153. | புட்டில் | தக்கோலம் |
| 154. | தாரம் | தேவதாரம் |
| 155. | வெருக்கென | உடனே |
| 156. | வெய்யமா சயிந்தந் | இந்துப்பு |
| 157. | குலத்தை | சாதிக்காய் |
| 158. | சந்து மா மதுரம் | சந்தனம், அதிமதுரம் |
| 159. | வளையம் | தாமரைக் கிழங்கு |
| 160. | நந்தாத செங்கழுநீர் கிழங்கு | செங்கழுநீர் கிழங்கு |
| 161. | நெய்தல் | நெய்தல் கிழங்கு |





| | | |
|---|---|---|
| 162. | மிஞ்சினது குருகுமெல்லாம் | ஈச்சம் குருத்து |
| 163. | வள்ளியினிற் | நீர் வள்ளிச்சாறு |
| | திகழ்முத்த | கோரைக்கிழங்கு |
| 164. | வங்க மதிமதுரம் | இலவங்கம், அதிமதுரம் |
| 165. | வனசமதும் | தாமரை |
| 166. | சீதேவியார் | சீதேவியார் செங்கழுநீர் |
| 167. | நாழிப்பா விதிலா நெய்யுந் | தேங்காய்ப்பால் |
| 168. | சந்தஞ் | சந்தனம் |
| 169. | திகரிப் படையெனவே | குதிரைப் படையெனவே |
| 170. | தெளிவற | மயக்கமான நிலையில் |
| 171. | முல்லை | கறிமுல்லை |
| 172. | சீ ரேலமுடன் | சீரகம், ஏலமுடன் |
| 173. | பஞ்ச தாரை | வெல்லம் |
| 174. | நீடு மாதளை | மாதுளங்கனி |
| 175. | பன்றிக் குறும்பனையதும் | நிலாப்பனங்கிழங்கு |
| 176. | முசுக்கை | மொசு மொசுக்கை |
| 177. | நீர்வள்ளி | சாத்தாவாரி |
| 178. | சேர்தோயம் | சேர்த்து |
| 179. | மத்தி மூலம் | அத்திவேர் பட்டை சாறு |
| 180. | பழத்திற்றேன் | சாம்பல் வாழைப்பழச்சாறு |
| | நீர்ப்பூலா | புல்லாந்தியிலைச் சாறு |
| 181. | கானமரும் பழம்பாசி | பழம்பாசிச்சாறு |
| 182. | மண்ணிற் றாலம் | நிலப்பனைக் கிழங்குச் சாறு |
| 183. | முல்லை | கறிமுல்லைவேர்/பஞ்சபாண்டவர் முல்லை வேர் |
| 184. | இருமல்லிகை | காட்டு மல்லிகை கொடிமல்லிகை |
| 185. | ஆவரை | ஆவாரை வேர் |
| 186. | பலாக் கண்ணி | பலாக்காய் பிஞ்சு |
| 187. | கோ தும்பை | பேய்க்கொம்மட்டி |
| 188. | மாவரம்பூ | ஆவரசம் பூ |
| 189. | திருவுறையும் கமலப்பூ | செந்தாமரைப் பூ |
| 190. | மகரப் பூ | பெருஞ்சீரகம் |
| 191. | குந்துருக்கம் | குருந்துருக்கம் |
| 192. | சதையடைப்பு | மூத்திர மார்கத்தில் சதையடைப்பு |
| 193. | சுவாத காசம் | பெண்களுக்குண்டாகும் சுவாத காசம் |

| | | |
|---|---|---|
| 194. | பன்றிக் கோவை | நிலப்பனைகிளைக்கு, கொவ்வைகிழங்கு |
| 195. | திராய் | திராய் மரம் |
| 196. | பேய்த்தி மிட்டி | பேய்மருட்டி/கிலுகிலுப்பை |
| | பகர்சாள மஞ்சிட்டி | குங்கிலியம், மஞ்சட்டி |
| | வனசவளையம் | தாமரை வளையம் |
| 198. | திப்பில் | திப்பிலி |
| 199. | கூறுதுவர்ச் சிகை | காசுக்கட்டி |
| 200. | கறியின் பாலை | கறிப்பாலை |
| 201. | சீதுளாய் | துளசி |
| 202. | நேருமாலை | துளசி |
| 203. | சீரம் | சீரகம் |
| 204. | மதிசே ரடவி | அடவிகச்சோலம் |
| 205. | அதாவரிசி | பெருஞ்சீரகம் |
| 206. | களப்பன்னை | கரும்பன்னை |
| 207. | கல்முரிசு | கறிமுருக்குவேர் |
| 208. | நுவலி, யங்கு | நறுவிலி, யங்கு வேர்வகை |
| 209. | கொடி மல்லிகை | கொடி மல்லிகை |
| 210. | வேளை | தயிர்வேளை |
| 211. | ஓரிதழின் கஞ்சம் | ஓரிதழ் தாமரை |
| 212. | வரிக்கற் றாழை | சாம்பற்தாழை |
| 213. | பளிதங் கூட்டித் | பச்சைக் கற்பூரம் |
| | குறுந்தொட்டி | சிறுகாஞ்சோன்றி |
| 214. | கமழாம்பல் | ஆம்பல் |
| 215. | சந்த மிருவேலி | சந்தனம், வெட்டிவேர் |
| 216. | பளிதம் | பச்சைக்கற்பூரம் |
| 217. | புகன்ற கைதை விழுது | தாளம் விழுது |
| 218. | காற் பாசக் காயும் | பருத்திக்காய் |
| 219. | கதலிக் கந்தம் | கதலி வாழைக் கிழங்கு |
| | மகாபஞ்ச மூலம் | வில்வம், பெருவாகை, பெருங்குமிழ் பாதிரி, சிறுவழுதுணை |
| | பஞ்சவல்கலம் | ஆல், அத்தி, அரசு,. கல்லாலை, நாவல் இவற்றின் பட்டை |
| | சாணம் | ஒரு வீசம் பலம் |
| | தாமூலம் | கண்டங் கத்திரி, சிறுமல்லிகை, சிறுவழு· துணை, தழுதாழை, நெரிஞ்சி, பாதிரி, பெருங்குமிழ், பெருமல்லிகை, வாகை, வில்வம். |

தயா அச்சகம்
கொம்பியூட்டர் பிறின்ட் & றோணியோ,
138, நாவலர் வீதி, (மனோகராச் சந்தி அருகாமை)
யாழ்ப்பாணம். T.P. No. 2881